No:52:12 Price : Rs:5.00

Herald of Deliverance
விடுதலைத் தூதன்

"Speak evil of no man" - Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

DECEMBER 2008



இயேசு கிறிஸ்துவின் பிறப்பு

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆசிரியர் உரை

அன்பான தூதன் வாசகர்களுக்கு,

எனது உளங்கனிந்த கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்.

வருடத்தின் கடைசி மாதமாகிய டிசம்பர் மாதத்தில் நாம் வந்துள்ளோம். பொதுவா இம்மாதத்தைக் கர்த்தருடைய பிள்ளைகள் ஒரு சிறப்பான மாதமாக எண்ணுவர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இம்மாதத்தில்தான் பிறந்தார் என்று எண்ணி, கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டா மகிழ்வர். ஆனால், உண்மையான கிறிஸ்துமஸ் என்பது, கிறிஸ்துவில் காணப்படும் தாழ்மை எளிமை, தியாகம், அன்பு இவைகளைத் தேவபிள்ளைகள் தங்களது வாழ்க்கையில் பிரதிபலித்து உலகிற்கு ஓர் எடுத்துக்காட்டாய் வாழ்வதேயாகும்.

இவ்வருடத்தின் கடைசியில் வந்திருக்கிற நாம் நம்முடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பது மிக, மிக இன்றியமையாதது. கர்த்தருக்குப் பிரியமில்லாதவைகள் நம்மிடத்தில் உண்டானால் அவைகளை அகற்றி, நம்மைச் சீர்ப்படுத்த முற்படவேண்டும். புதிய வருடத்திலே புதிதான பிரதிஷ்டையோடும், புதிய அபிஷேகத்தோடும் நாம் பிரவேசிக்கவேண்டும். எனவே இம்மாதத்தில் நாம் அதிகமாகத் தேவசமுகத்தில் காத்திருக்கவேண்டும். "கர்த்தாவே, என்னை தொடும்; என்னைப் புதுப்பியும்; எனக்கோர் புதிய அபிஷேகத்தைத் தாரும்" என்று ஊக்கமா ஜெபித்து, கர்த்தரிடத்திலிருந்து புதிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவோமாக.

மேலும், இந்நாட்களில் நம் தேசத்தில் கர்த்தருடைய பிள்ளைகள் அநுபவிக்கி உபத்திரவங்களுக்காக மனதுருக்கத்தோடு ஜெபம் செய்ய நாம் கடமைப்பட்டுள்ளோம். ஜெபத்தை கேட்கும் தேவன் நமது ஜெபங்களுக்குப் பதிலளித்து, நிச்சயமாக அவர்களை விடுவிப்பார்.

இப்போது நாம் அநுபவிக்கின்ற பாடுகள் நூதன்மானவையல்ல. ஆதி அப்போஸ்தல களுடைய காலத்தில் அவர்கள் பட்டபாடுகள் ஏராளம். அப்போஸ்தலர் 5:41 இல், "*அவருடை நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினா சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்*" என்று காண்கிறோம். தேவ பிள்ளைகள் தேவனுக்காகப் பாடுபடுவதை மகிழ்ச்சியாய் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

14,15,16 ஆம் நூற்றாண்டுகளிலேயும் தேவனுடைய பிள்ளைகள் பாடுபட்டிருக்கின்றன இந்நாட்களில், "எல்லாவற்றையும் சகிக்க எங்களுக்குக் கிருபையையும் பெலனையும் தாரு என்றுதான் நாம் ஜெபிக்கவேண்டும். ஏனெனில், "*இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தி வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல*" என்று ரோமர் 8:18 இல் காண்கிறோ ஆகவே, தேவ கிருபையைப் பெற்று வாழ்வோமாக.

அன்பானவர்களே! இந்நாட்களில் மற்றவர்களது பாரங்களைச் சுமந்து, அவர்களுக்கா கர்த்தரிடத்தில் பரிந்து ஜெபிப்போமாக. சிறப்பாக, தேவனுடைய ஊழியர்கள் சத்தியத்தை மு தைரியத்தோடே மக்களுக்கு எடுத்துரைத்து, இயேசுவின் சாயலை வெளிப்படுத்தி, ஆவிக்குரி ஊழியத்தைச் செய்ய, அவர்களுக்கு வேண்டிய கிருபைகளைத் தேவன் அருளுமாறு ஜெபிப்போ

நானும் மேற்கூறிய குறிப்புகளுக்காக அனுதினமும் ஜெபித்துவருகிறேன். கர்த்தர் உங்கள ஆசீர்வதிப்பாராக.

அன்புள்ள

R. K. Sam

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு

(போதகர் எம்.கே. சாம் சுந்தரம்)

இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாள் இம்மாதத் ...ல் உலகமெங்கிலும் கொண்டாடப்படுகின்றது. ...றிஸ்துவின் பிறந்த நாள் இன்ன நாள்தான் என் ...தை எவரும் சரியாகக் கூறமுடியாது. எனினும், ...ம்பர் திங்கள் 25 ஆம் நாளைக் கிறிஸ்து பிறந்த ...ள் என்று உலகம் கொண்டாடுவதால், அந்த ...ளின் மகிழ்ச்சியையும் அதனால் கிட்டும் முக ...லாச்சியும் நாம் பிறருக்குக் காட்டுவதில் தவ ...றொன்றுமில்லை. இயேசுவின் பிறப்பு மக்களது ...வலைகளைப் போக்கும்; நிறைவை உண்டாக்கும்.

"தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படா ...ருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த ...ந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை ...உங்களுக்கு அறிவிக்கிறேன்.

இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் ...உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்கா 2:10,11).

இயேசுவின் பிறப்பைக்குறித்துத் தியானிக்கும் ...தெல்லாம் நமக்குப் பல ஆசீர்வாதங்கள் கிடைக் ...கின்றன. மேற்கூறப்பட்ட வசனங்களை நாம் பல ...முறை வாசித்திருக்கலாம். எனினும், இந்த வசனம் ...இப்போது ஒரு புதிய கோணத்தில் ஒரு புதிய ...செய்தியினை வெளிப்படுத்துகின்றது. இதன் ...சாரத்தை இன்று காண்போம்.

தேவதூதன் மேய்ப்பர்களிடத்தில் இயேசு ...பிறந்திருக்கிறார் என்று கூறாமல், *"கர்த்தராகிய ...கிறிஸ்து என்னும் இரட்சகர் ... பிறந்திருக்கிறார்"* ...என்று கூறினான். வேதாகமத்தின் சுவிசேஷங்கள் ...அனைத்தும், 'இயேசுவே கிறிஸ்து' என்று குறிப் ...பாகவும், தெளிவாகவும் கூறுகின்றன. 'இயேசுவே ...கிறிஸ்து' என்று கிறிஸ்தவர்கள் அறிவர். எனினும், ...இயேசு கிறிஸ்து பிறந்த குலத்தில் வாழும் யூதர்கள், ...இயேசுதான் 'கிறிஸ்து' என்பதை ஏற்றுக்கொள்ளு ...வதில்லை.

யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய ...யோசேப்பைப் பெற்றான்; அவளிடத்தில் கிறிஸ்து ...எனப்படுகிற இயேசு பிறந்தார்" (மத்.1:16).

கிறிஸ்து எனப்படுகிற இயேசு பிறந்தார்' என்று ...கூறப்படுவது அவசியமா? அவசியமே! யூதர்கள், ...மேசியா என்று அழைக்கப்படுகிற கிறிஸ்து எப் ...போது வருவார் என்று இன்னமும் ஆவலோடு எதிர் ...பார்த்துக்கொண்டு இருக்கின்றனர். அவர்கள் கண் ...கள் இன்னமும் குருடாகவே இருக்கின்றன.

யோவான்ஸ்நானன் மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங்கம்பண்ணிக்கொண்டிருந்த வேளையில், *"இயேசு நடந்துபோகிறதை அவன் கண்டு: இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான்"* (யோவான் 1:36). அவன் அப்படிச் சொன்னதைக் கேட்டு அவனோடிருந்த இரு சீஷர்களும் இயேசுவைப் பின்சென்றார்கள். அவர்களில் ஒருவன் அந்திரேயா. அந்திரேயாதான் முதலில் இயேசுவைக் கண்டான். பின்னர் அவன் தன் சகோதரனை நோக்கி, *"மேசியாவைக் கண்டோம்"* என்றான். மேசியா என்றால், 'கிறிஸ்து' என்பது பொருள். அந்திரேயா பேதுருவிடம் கூறினதுபோது, "இயேசுவைக் கண்டோம்" என்ற சொற்களைப் பயன்படுத்தவில்லை; மாறாக, *"மேசியாவைக் கண்டோம்"* என்று கூறினது இங்குக் குறிப்பிடத்தக்கது.

'கிறிஸ்து' என்ற சொல்லுக்கு, 'அபிஷேகிக்கப்பட்டவர்' என்பது பொருள். மேய்ப்பரிடத்தில் தேவதூதனும், *'கிறிஸ்து'* என்றுதான் கூறினான். 'இயேசுவே கிறிஸ்து' என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதில் மூன்று முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளன.

'இயேசுவே கிறிஸ்து' என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்; 'இயேசுவே கிறிஸ்து' என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுவதினால் கிடைக்கும் நன்மைகள்; 'இயேசுவே கிறிஸ்து' என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதினால் நாம் நிறைவேற்றவேண்டிய கடமைகள் என்பனவாகும்.

1. இயேசுவே கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுவதினால் கிட்டும் ஆசீர்வாதங்கள்

"அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்.

சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்" (மத்.16:14-16).

இயேசு கிறிஸ்து பிலிப்புச் செசரியா பட்டணங்களில் ஊழியஞ்செய்த பின்னர், அதன் வடதிசை...

களில் வந்தபோது, தம்முடைய சீஷர்களை நோக்கி, மனுஷகுமாரனாகிய தம்மை ஜனங்கள் யார்? என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்குச் சீஷர்கள் அளித்த பதிலைத்தான் மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் காண்கிறோம்.

இதே கேள்வியைச் சீஷர்களிடத்தில் கேட்டபோது பேதுரு, "நீர் தேவ குமாரன்" என்றோ, "இயேசு" என்றோ கூறாமல், "*ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய* ***கிறிஸ்து***" என்றான். அப்போது இயேசுகிறிஸ்து பேதுருவை நோக்கி, "*நீ பாக்கியவான்*" என்றார். பாக்கியவான் என்றால் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்பது பொருள். ஆம், **'இயேசுவே கிறிஸ்து' என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்பவன் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவான்.**

யோவான் சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து யூதர்களிடையே பேசும்போது, தாமே மேசியாவாகிய கிறிஸ்து என்பதை விளங்கப்பண்ண, "*என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்*" (யோவான் 6:54) என்றார்.

இந்தச் சத்திய உபதேசங்களை இயேசு கிறிஸ்து கூறினபோது, யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. "*இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்*" (யோவான் 6:60). அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனே நடவாமல் பின்வாங்கிப்போனார்கள். அப்பொழுது இயேசு கிறிஸ்து தமது பன்னிரு சீஷர்களையும் நோக்கி, "*நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?*" என்றார் அன்புத்தொனியுடன்.

"*சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே.*

நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்" (யோவான் 6:68,69).

மேற்கூறப்பட்ட இரு சூழ்நிலைகளிலும் யூதகுலத்தில் அமைந்த சீமோனாகிய பேதுரு மட்டுமே, 'இயேசுவே கிறிஸ்து' என்ற வெளிப்படுத்தலைத் தானும் தன் சகோதரரும் பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டினான். எனினும், அவரது பன்னிரண்டு சீஷர்களுள் ஒருவனான யூதாஸ்காரியோத்து இவ்வித வெளிப்படுத்தலைப் பெறாத சாத்தானாயிருந்தான் என்பதை, இயேசு கிறிஸ்து தாமே கூறியுள்ளதை வேதத்தில் காணலாம்.

இன்றுங்கூட இஸ்ரவேலில் வாழும் யூதர்கள் இயேசுவே கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களது ஊரில், "அழுகையின் சுவர்" என்றுள்ள ஒரு சுவர் காணப்படுகின்றது. யூதர்கள் அங்கே சென்று தங்கள் தலையை முட்டி, முட்டி, மோதி, "மேசியாவே நீர் எப்பொழுது வருவீர்?" என்று அழுது புலம்பிக்கொண்டிருக்கின்றனர்.

"மேசியா" என்றால் உலகத்தை ஆளுகிறவர் என்பது பொருள். யூதர்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைத்தான், முதலாம் வருகை என எண்ணுகின்றனர். இன்றும் இஸ்ரவேலர் தங்கள் குலத்தில் உதித்த இயேசுவை, 'கிறிஸ்து' என்று அறிந்துகொள்ளாது வாழ்கிறது ஆச்சரியமே!

இன்றைய நாட்களில் நமது கண்களும், உள்ளான மனமும் திறக்கப்பட்டிருக்கிறதற்காகத் தேவனைத் துதிப்போம். யூதர்களும், புறஜாதிகள் அனைவரும் இயேசுவை, 'கிறிஸ்து' என்று ஏற்றுக்கொள்வது இந்நாட்களில் எளிதாய்க் காணப்படுகின்றது. 'இயேசுவே கிறிஸ்து' என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதினால் என்ன ஆசீர்வாதம் கிடைக்கும்? அவரை **ஆராதிக்கும் ஆசீர்வாதத்தைப்** பெற்றுவாழமுடியும்.

ஏரோது, தனது ஆட்சிக்காலத்தில் "*பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச்செய்து:* ***கிறிஸ்துவானவர்*** *எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்*" (மத்.2:4)

"*நீங்கள் அதைக் கண்டபின்பு, நானும் வந்து* ***அதைப் பணிந்துகொள்ளும்படி*** *எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பினான்*" (மத்.2:8).

இங்கு, '*பணிந்துகொள்ளும்படி*' என்ற சொற்கள் கிறிஸ்துவை ஆராதித்தலைத்தான் குறிப்பிடுகிறது. ஏரோதுங்கூட, இயேசுதான் கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலைப் பெற்றிருந்தான். அதனாலதான் அவரை ஆராதிக்கவேண்டும் என்று சாஸ்திரிகளிடம் கூறினான். அவன் இயேசுவை உண்மையாக ஆராதிக்க விரும்பவில்லை. எனினும், அவன்தான், கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலை அவன் பெற்றிருந்தது ஆச்சரியமே! ஆம், 'இயேசுவே கிறிஸ்து' என்ற வெளிப்படுத்தலைப் பெற்றிருந்த சாஸ்திரிகள் என்ன செய்தனர்? அவரை ஆராதிப்பதற்காகச் சென்று, தங்கள் காணிக்கைகளை அவருக்குமுன் படைத்தனர்.

"*அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும்*

கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்து கொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப் போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்'' (மத்.2:11).

சாஸ்திரிகள் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்தனர். பொன்னையும், தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் கிறிஸ்துவுக்குக் காணிக்கையாகப் படைத்தனர். சாஷ்டாங்கமாய் அவருக்குமுன் விழுந்து பணிந்து, ஆராதித்தனர். ஆம், இயேசுதான் கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலை இக்கிறிஸ்துமஸ் தினனாளில் பெற்றுக்கொள்ளுங்கள். அவரை ஆராதியுங்கள்.

கிறிஸ்துவை ஆராதிக்க அவருக்கு நீங்கள் செலுத்தவேண்டிய காணிக்கை என்ன? உங்களையே நீங்கள் காணிக்கையாகச் செலுத்தவேண்டும். நீங்கள் கொடுக்கவேண்டிய காணிக்கை பொன்னும், வெள்ளியுமல்ல; உங்களது சரீரமே அவரது ஆராதனைக்குரிய காணிக்கைப் பொருள் ஆகும்.

''உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?'' (1 கொரி.6:19).

''அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான **ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டு** *மென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க* **புத்தியுள்ள ஆராதனை''** (ரோமர் 12:1).

ஆம், உங்களது சரீரம் உங்களுக்குச் சொந்தமல்ல; உங்களது கண், காது, வாய், கைகள், கால்கள் அனைத்து உறுப்புக்களும் இயேசுவுக்குத்தான் சொந்தம். உங்களது அனைத்து உறுப்புக்களையும் நீங்கள் விரும்புமாப்போல் செயல்படுத்தாமல் இயேசு விரும்புமாப்போல் செயல்படுத்தும்படி ஒப்புக்கொடுங்கள். இவ்விதமான காணிக்கையைத்தான் தேவன் விரும்புகிறார். உதட்டளவில் உங்களை அர்ப்பணியாமல், உண்மையான உள்ளத்தோடு உங்களது **ஆவி, ஆத்துமா, சரீரத்தை** இயேசுவுக்கு அர்ப்பணியுங்கள்.

உங்களது வாழ்க்கையே இயேசுவுக்குகந்த ஆராதனையாக மாறவேண்டும். அப்போது, பாவங்கள், சிற்றின்பங்கள், சோதனைகள் உங்களை இழுக்க—உங்களை ஆட்கொள்ள—வரும்போது, ஜெயங்கொள்ள முடியும். சில மணிநேரம்தானே என நீங்கள் எண்ணி, உங்களது சரீர உறுப்புகளை விற்றுப்போட உங்களது மனம் துணியாது. **''எனது சரீரத்தின் அங்கங்கள் அனைத்தும் இயேசுவுக்குச் சொந்தம்; அவரை ஆராதிக்கவே நான் எனது உறுப்புக்களை அர்ப்பணித்துள்ளேன்''** என்று கூறி ஜெயமெடுப்பீர்கள்.

இந்தக் கிறிஸ்துமஸ் நாளிலே உங்களது சரீர உறுப்புகளை, கிறிஸ்துவை ஆராதிக்கும்படி அர்ப்பணித்துள்ளீர்களா? ஆராய்வீர்களாக. **இயேசுவே கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுள்ளதற்கு ஆதாரமாக உங்களது வாழ்க்கை எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளதா? ஆராயவும். பிரியமானவர்களே! இன்றுதானே உங்களை முற்றும் அர்ப்பணிப்பீர்களாக.**

2. இயேசுவே கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுள்ளதால் கிடைக்கும் நன்மைகள்

''கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது.

அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாணமுறைமையின்படி செய்வதற்குத் தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டு வருகையில்,

அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்து:

ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போக விடுகிறீர்'' (லூக்கா 2:26-29);

'கர்த்தருடைய கிறிஸ்து' என்னும் சொற்களை இங்கு முக்கியப்படுத்த விரும்புகிறேன். கிறிஸ்துவைக் காணுமுன் தான் மரிப்பதில்லை என்ற வெளிப்படுத்தலைப் பரிசுத்த ஆவியால் பெற்றிருந்தான் சிமியோன். அவன் நீதியும் தேவபக்தியும் உடையவன். இஸ்ரவேலின் ஆறுதல்வரக் காத்திருந்தவன். அவன்மேல் பரிசுத்த ஆவியானவர் இருந்தார். சிமியோன், இயேசுவைக் கிறிஸ்துவாகக் கண்டான். அவரைக் கைகளில் ஏந்தினான். உடனே என்ன கூறினான்?

இப்பொழுது *''உமது அடியேனை சமாதானத்தோடே போகவிடுகிறீர்''* என்றான். ஆம், இயேசுதான் கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலைப் பெற்ற

வனுக்குக் கிடைக்கும் முதல் நன்மை என்ன? **"சமாதானம்"** ஆகும்.

அன்பானவர்களே! இந்தக் கிறிஸ்துமஸ் நாளில், நீங்கள் உடுத்தும் உடையோ, புசிக்கும் ருசியான ஆகாரமோ உங்களுக்குச் சமாதானத்தை அளிக்காது. கிறிஸ்துதான் உங்களுக்குச் சமாதானத்தை அருளுகிறவர்.

பரிசேயரில் ஒருவன் தன்னோடே போஜனம் பண்ணும்படி இயேசுவை வேண்டிக்கொண்டு, அவரைத் தன் வீட்டிற்குவரும்படி அழைத்திருந்தான். அப்போது பாவியாகிய ஒரு ஸ்திரீ, தன் பாவங்களுக்காக மனம்வருந்தி, அவரது பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்தாள்.

*"அவர் ஸ்திரீயை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, **சமாதானத்தோடே போ** என்றார்"* (லூக்கா 7:50).

உதிரப்போக்கினால் பன்னிரெண்டு ஆண்டுகளாய் அவதியுற்ற ஒரு ஸ்திரீ இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டு, உடனே சுகமானாள். கிறிஸ்து இயேசு அவளைப் பார்த்து, *"மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, **நீ சமாதானத்தோடே போய்**, உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்"* (மாற்கு 5:34).

இயேசு கிறிஸ்து, உயிர்த்தெழுந்ததை அறிந்த பின்னரும், சீஷர்கள் யூதர்களுக்குப் பயந்தபடியினால் தங்கள் அறைக்கதவுகளைப் பூட்டி, உள்ளே அமர்ந்திருந்தனர். பூட்டப்பட்டக் கதவுகளினூடே கிறிஸ்து இயேசு பிரவேசித்து, *"நடுவே நின்று: உங்களுக்குச் **சமாதானம்** என்றார்"* (யோவான் 20:19).

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து **சந்தேகப்பட்ட தோமாவோடுகூட** மற்ற சீஷர்களும் பூட்டப்பட்ட அறைக்குள் இருந்தனர். அப்போதும் கிறிஸ்து அவர்களுக்கு நடுவே வந்து நின்று, *"**உங்களுக்குச் சமாதானம்** என்றார்"* (யோவான் 20:26).

இதனை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பர்களே! பாவத்திலும் உலக சிற்றின்பங்களிலும் மூழ்கி, சமாதானமின்றி வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? இயேசுவைக் கிறிஸ்து என்று அறிந்துகொள்ளுங்கள். அவர் உங்களைப் பாவங்களிலிருந்து விடுவித்து, **சமாதானத்தை** அருளுவார்.

அன்பானவர்களே! துக்கத்தினால் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கின்றீர்களா? பயத்தினால் அறைக் கதவுகளை மூடி, உள்ளே தனித்துக் காணப்படுகிறீர்களா? உங்களைச் சூழ்ந்துள்ள உபத்திரவங்கள் உங்களைத் திகைக்கவைக்கின்றனவா? உள்ளத்தில் சமாதானமற்று, குழம்பிக் கொண்டிருக்கின்றீர்களா? எவரும் கொடுக்கவும் எடுக்கவும் முடியாத **தேவ சமாதானத்தை**, கிறிஸ்து இயேசு இன்று உங்களுக்குத் தருவதற்காகக் காத்து நிற்கின்றார்.

இந்த நன்னாளிலேதானே உங்கள் உள்ளத்தைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து, சிமியோன் பெற்ற **சமாதானத்தைப்** பெற்றுக்கொள்ளுங்கள். உலகம் உங்களுக்குச் சமாதானத்தைத் தரமுடியாது. கிறிஸ்து இயேசுவைப் பற்றிக்கொள்ளுங்கள். சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

*"இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே **நித்தியஜீவனை** அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது"* (யோவான் 20:31).

இயேசு கிறிஸ்து தமது வாழ்நாட்களிலே ஒருமுறை சமாரியா நாட்டின் வழியாய்க் கடந்து செல்ல வேண்டியதாயிருந்தது. பயணத்தினிமித்தம் களைப்படைந்தவராய் யாக்கோபின் கிணற்றண்டையிலே இயேசு உட்கார்ந்தார். அப்போது தண்ணீர் மொண்டு கொள்ளும்படியாய் ஒரு சமாரியப்பெண் அங்கு வந்தாள்.

தாம் மேசியாவாகிய கிறிஸ்து என்பதை அவளுக்கு வெளிப்படுத்திக் காட்டும்படியாகவும், நித்திய ஜீவனை அவள் பெற்று அநுபவிக்கும்படியாகவும் அவளிடம், "தாகத்துக்குத் (தண்ணீர்) தா" என்று உரையாட ஆரம்பித்தார்.

"நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்" (யோவான் 4:14).

'நித்திய ஜீவகாலமாய்' என்ற சொற்றொடரின் உண்மைப் பொருளை உணராதவளாய் அவள், *"அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்"* என்று கேட்டாள். நித்திய ஜீவனைக்குறித்து அவளுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்று இயேசு கிறிஸ்து எண்ணி, *"அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார்"* (யோவான் 4:16).

அதற்கு அந்த ஸ்திரீ, தனக்குப் புருஷன் இல்லை யென்ற உண்மையை ஒத்துக்கொண்டாள். இயேசு கிறிஸ்து அவளது சரித்திரம் முழுவதையும் அவளுக்கு விளக்கமாகக் கூறினார்.

"உனக்குள்ளே உலக இன்பத்தைக்குறித்த தாகம் ஏற்பட்டதால், ஐந்து புருஷர்களை நீ திருமணம் செய்தாய். எனினும், நீ திருப்தியடையவில்லை. இப்போது உன்னுடன் வாழும் மனிதனும் உனது புருஷன் இல்லை" என்று அவளது வரலாற்றையே கூறினார் கிறிஸ்து இயேசு. அதைக்கேட்டு அவள் அப்படியே உரைந்து போனாள். மட்டுமன்றி, "உன்னுடைய உள்ளத்தில் எனக்கு இடம் தருவாயானால் நான் உனக்குள் தங்கி வாசம்பண்ணுவேன்; உனக்கு நித்திய ஜீவன் உண்டாயிருக்கும்" என்னும் சத்தியத்தை மறைமுகமாகவும் அவளுக்கு எடுத்துரைத்தார்.

"*அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து எனப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்*" (யோவான் 4:25).

இங்கு, புறஜாதியிலே தோன்றின சமாரியப் பெண்ணுங்கூட கிறிஸ்துதான் மேசியா என்றுள்ள வெளிப்படுத்தலைப் பெற்றிருந்தாள். இதனை நோக்கும்போது ஆச்சரியமுண்டாகுகின்றதல்லவா?

"*நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள்*" (யோவான் 4:29).

இயேசு கிறிஸ்து, தாமே அந்த மேசியா என்று கூறினவுடன், தண்ணீர்க் குடத்தை அங்கேயே வைத்துவிட்டு, அவர் கிறிஸ்துதானோ என்று மக்கள் அறிந்துகொள்ளும்படி அவர்களை அழைக்க, ஊருக்குள் ஓடினாள்.

ஆம், கிறிஸ்து யார்? அவர் உங்களது கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் எல்லாவற்றையும் அறிந்த சர்வ ஞானியும், சர்வ வியாபியும் ஆவார். அவரது கண்களுக்கு முன்பாக மறைவானது ஒன்றுமேயில்லை. நீங்கள் செய்யும் காரியங்களை உங்களது மனைவிமார்களோ, புருஷர்களோ பெற்றோர்களோ அன்றி, பிள்ளைகளோ, உறவினரோ அறியாதிருக்கலாம். அனைத்தையும் யாருங் காணாத அந்தரங்கத்தில் நீங்கள் செய்திருக்கலாம். ஆனால், கிறிஸ்துவானவரோ அனைத்தையும் வெளியரங்க மாகக் கொண்டுவந்து நிறுத்துவார் என்பதை அறிவீர்களாக.

சமாரிய ஸ்திரீ 'இயேசுவே கிறிஸ்து' என்ற வெளிப்படுத்தலை அவ்வேளையில்தானே பெற்றுக்கொண்டாள். உடனே அவரை ஏற்றுக்கொண்டாள். அப்போது, அவளுக்கு என்ன நன்மை கிட்டியது? திருப்தியும், நித்திய ஜீவனும் ஆகும். அதனை அவள் சுதந்தரித்துக்கொண்டாள்.

"*தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்*" (1 யோவான் 5:18).

இயேசுவே கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலைப் பெற்றவன் பாவஞ்செய்யமுடியாது. ஏன் அவன் பாவஞ்செய்யமுடியாது? "*ஏனெனில் அவருடைய (கிறிஸ்துவுடைய) வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்*" (1 யோவான் 3:9).

இதனால் கிடைக்கும் நன்மை என்ன? வெற்றி வாழ்க்கை. நிலத்திலே வித்துக்களை விதைக்கும்போது, அந்த வித்துக்கள் உயிர்பெற்று ஜீவனோடு வெளிவருகின்றனவல்லவா? ஆற்றிலே போகும் உயிருள்ள மீன்கள் நீரோட்டத்திற்கு எதிராக, எதிர்நீச்சல் போடுகின்றனவல்லவா? அதுபோல, 'இயேசுவே கிறிஸ்து" என்ற வெளிப்படுத்தலைப் பெற்றவன், வாழ்க்கையாகிய கடலில் எதிர்நீச்சல் போட்டு, வெற்றிவாகை சூடும் நன்மையைப் பெறுவான்.

ஆம், இயேசுவே கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுவதால் எல்லாச் சூழ்நிலைகளிலும் சமாதானம் பெற்று வாழமுடியும். நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளமுடியும். தேவனது வித்தை உள்ளத்தில் பெற்று இருப்பதால் வெற்றி வாழ்க்கை வாழமுடியும்.

3. இயேசுவே கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டவன் நிறைவேற்றவேண்டிய கடமைகள்

'இயேசுவே கிறிஸ்து' என்ற வெளிப்படுத்தலைப் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மூன்று. அவை: ஆத்தும ஆதாயஞ் செய்தல், வேத வசனங்களைப் போதித்தல், தேவனுடைய பிள்ளைகள்மீது அன்பு கூருதல் ஆகும்.

"*அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம்.*

பின்பு, அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக்கொண்டுவந்தான். இயேசு அவனைப் பார்த்து: நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்'' (யோவான் 1:41,42).

அந்திரேயா இயேசுவைக் கிறிஸ்து என்று அறிந்தபின் என்ன செய்தான்? அவன் சகோதரனான பேதுருவைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தினான். தன் சகோதரனை மட்டுமன்றி, தன் குடும்பத்தாரையும் கிறிஸ்துவண்டை அவன் வழிநடத்தியிருக்கக் கூடும்.

அன்பானவர்களே! 'இயேசுவே கிறிஸ்து' என்ற வெளிப்படுத்தலைப் பெற்ற நீங்கள் சும்மா இருக்கமுடியாது; இருக்கவுங்கூடாது; உங்களது இரட்சிப்பைக்குறித்து, கிறிஸ்துவினால் பெற்ற பாவமன்னிப்பைக்குறித்து, உங்களது குடும்பத்தாருக்கும் உங்களது வட்டாரத்திலிருக்கும் மக்களுக்கும் உங்களது பட்டணத்திலிருக்கும் மக்களுக்கும் பறைசாற்றி, அவர்களை இயேசுவண்டை வழிநடத்தவேண்டும். **ஆத்தும ஆதாயத்தில் முனைந்து** நிற்பது உங்களது தலையாய கடமை.

''தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்'' (அப்.5:42).

அடுத்து, தேவ பிள்ளைகள் செய்யவேண்டிய கடமை என்ன? இயேசுதான் கிறிஸ்து என்று பிரசங்கிக்கவேண்டும். அப்போஸ்தலர்கள் என்ன செய்தனர்? அனுதினமும் தேவாலயத்திலும் வீடுகளிலேயும் "இயேசுவே கிறிஸ்து" என்று இடைவிடாமல் மக்களுக்குப் பிரசங்கித்தனர்.

அன்பானவர்களே! எங்குச் சென்றாலும் வேத வசனத்தைப் போதியுங்கள். வீட்டிலே பிள்ளைகளிடத்திலும், இன, ஜன பந்துக்களிடத்திலும் இயேசுவைக்குறித்துப் போதியுங்கள். அவரே மீட்பர்; விடுவிக்கிறவர்; சமாதானம் அருளுகிறவர்; நித்திய ஜீவனை அருளுகிறவர் என்று பறைசாற்றுங்கள். இது உங்கள்மேல் விழுந்த கடமை. கர்த்தருக்கு ஊழியஞ்செய்வதில் அசதியாயிராதேயுங்கள். ஊக்கமாகக் கர்த்தருக்குச் சேவை செய்யுங்கள்.

''இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான்'' (1 யோவான் 5:1).

மூன்றாவதாக, இயேசுவே கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலைப் பெற்றவர்கள் இயேசுவிடத்தில் அன்புகூருகிறதுபோன்று, அவரால் பிறப்பிக்கப்பட்ட தேவ பிள்ளைகள் மீதும் அன்புகூரவேண்டும். ஆலயத்தில் வந்து கைதட்டி, பாடல்களைப் பாடி தேவனை ஆராதிப்பதுமட்டும்தான், இயேசுவைக் கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலைப் பெற்றிருப்பது அல்ல; சகவிசுவாசிகளிடம் அன்போடும், பரிவோடும் கரிசனையோடும் நடந்துகொள்ள வேண்டும்.

சில விசுவாசிகள் அருகில் அமர்ந்திப்பவர்களோடுமட்டும் பேசுவர், விசாரிப்பர்; புதிதாகத் தேவனுடைய இராஜ்யத்தில் இணையும் விசுவாசிகளிடமும் அன்புகூர்ந்து, விசாரிப்பது அவசியம். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, பாவமன்னிப்பைப் பெற்றவர்கள் அனைவரும் தேவனுடைய பிள்ளைகள்; தேவபிள்ளைகளோடு ஐக்கியம் பாராட்டுவது நம்மேல் விழுந்த முக்கியக் கடமைகளுள் ஒன்றாகும்.

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் கசப்பும், விரோதமும் பகைமையும் பெற்றிருத்தல் கூடாது. இவ்வித குணமுடையோர், தேவனால் பிறப்பிக்கப்பட்டவரிடத்தில் அன்புகூராததினால் கிறிஸ்துவினுடைய பிள்ளைகள் என ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்.

''தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?

தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்'' (1 யோவான் 4:20,21).

அன்பானவர்களே! இந்நன்னாளில் 'இயேசுவே கிறிஸ்து' என்ற வெளிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளுங்கள். **ஆத்தும ஆதாயம் செய்யுங்கள்; மற்றவர்களுக்கு இயேசுவைப் பிரசங்கியுங்கள். இயேசுவினுடைய பிள்ளைகளிடம் அன்புகூருங்கள்.**

இயேசுவைக் கிறிஸ்து என்ற வெளிப்படுத்தலைப் பெற்ற நீங்கள் ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் அவரிடமிருந்து பெற்று, உங்களது கடமைகளையும் நிறைவேற்றுவீர்களாக. கர்த்தர்தாமே உங்களுக்கு வேண்டிய கிருபைகளை நல்குவாராக. ஆமென்.

UNTO US A CHILD IS BORN

(Pastor M.K.Sam Sundaram)

"Now when Jesus was born in Bethlehem of Judaea in the days of Herod the king, behold, here came wise men from the east to rusalem" (Matthew 2:1).

The Child whose birth we celebrate on hristmas day is Jesus the Son of God. He took e form of a human child and was born in an scure town called Bethlehem in Judea. His birth lfilled the prophecy in Micah 5:2. No one knew this unique Child's birth until the wisemen (Magi) om the east came to worship the One they called *e King of the Jews."*

In the second chapter of the Gospel according St.Matthew, the author gives the details of the rth and infancy of Jesus. A deep study of the apter reveals the different facets of the person Jesus. Viewed from certain perspectives, He is en as: the King, the Star, the Governor, the Child d the Nazarene. Let us consider each of the roles the Word of God portrays them.

THE KING

"... Where is he that is born King of the ws?..." (Matt.2:2).

Here we read the question raised by the Magi. The birth of Jesus was different from that of human baby since the Holy Spirit took the itiative in Mary's conception. Even at birth Jesus e baby was known to be King, since the Magi me looking for the King of the Jews.

Normally where is a king born? History tells s that, in the past, every king was born in a palace. ut the King of the Jews was not born in a palace. he recorded evidence shows that Mary, the pectant mother of Jesus, and Joseph His legal, rthly father, had no place at any of the inns in ethlehem where they had gone for the census. herefore, the new born baby had to be in a manger aring a little space with the cattle. Surely, that is t the place where a king would be born. But, that was where the King of the Jews was kept as a baby wrapped in swaddling clothes.

The wisemen went to King Herod in Jerusalem seeking the One *"born the King of the Jews."* But, when they heard the Chief Priests and scribes say that according to the prophet, He would be born in Bethlehem of Judea, they went on their way, once again guided by the star they had seen in the east. They reached Bethlehem, entered the house where the young Child was (Jesus was no longer a baby then) and worshipped Him. They knew they were worshipping the King of the Jews, and therefore they offered Him expensive gifts—gold, frankincense and myrrh.

Jesus Himself acknowledged the fact that He had been born King. Before He was crucified, He was taken to be tried by Pilate, the governor of Judea. When Pilate asked Him if He was a king, Jesus said, *"Thou sayest I am a king. To this end was I born, and for this cause came I into the world, that I should bear witness unto the truth. Every one that is of the truth heareth my voice"* (John 18:37). The phrase *'to this end was I born'* makes it clear that there is a connection between the truth and His kingship. Here Jesus explains what the 'end' (purpose) is: it is to bear witness to the truth.

In John 14:6 Jesus declared Himself to be the truth. He said, *"I am the way, the truth and the life. No man cometh to the Father but by me."* Jesus is the personification of the truth, and therefore He said, "*I am the truth.*" He was born as King to bear witness to the truth.

Here the word 'truth' as spoken by Jesus is not merely the opposite of falsehood. It is a life giving force manifested in the person of Jesus. Since Jesus is the Saviour of mankind, the truth in the person of Jesus speaks to man, saves him from sin and sanctifies him.

The truth speaks

Once the Pharisees came to Jesus and said to Him, *"Master, we know thou art true, and carest for no man: for thou regardest not the person of man, but teachest the way of God in truth..."* (Mark 12:14). From this we infer that Jesus was always careful to advocate the truth. The truth that Jesus stood for and came to witness to the world is found in Matthew chapters 5,6 and 7—the most beautiful and eloquent sermon ever preached. Even today, the truth speaks to every one who reads those chapters and meditates on them, and doubtless, it transforms the lives of those who are deeply touched by the truth embedded in them.

The truth saves

Speaking of the truth Jesus said, *"And ye shall know the truth, and the truth shall make you free"* (John 8:32). In another context He said, *"If the Son sets you free, ye shall be free indeed"* (John 8:36). The two verses speak about Jesus the truth setting people free. What do people need to be free from? The Word of God says, *"All have sinned and come short of the glory of God"* (Romans 3:23); This means, all human beings have sinned, and sin has kept them in bondage. Therefore, all need to be delivered from the shackles of sin. Jesus came to the world for the very purpose of saving mankind from sin.

Although Jesus was born in this world as the King of the Jews, His purpose was not to establish an earthly kingdom. His birth had a far greater import than setting up a kingdom of which He would be the ruler. He came as the truth that had power to set people free from any presumptuous sins or addictions or bad habits which they, by their own effort, could never be delivered from. Jesus the truth saves humanity from sin.

The truth sanctifies

"Sanctify them through thy truth: Thy word is truth" said Jesus to His Father (John 17:17). Here Jesus explains the process by which a man who is saved from sin is sanctified. As Jesus prays to His heavenly Father to sanctify His disciples, He prays for every saved soul to be sanctified by the truth which is the Word of God. It is the living Word which makes one holy, for without holiness no one can see God. Jesus, who is the truth (John 14:6) and the Word (John 1:1) sanctifies you and makes you worthy to stand before God.

THE STAR

"Saying, Where is he that is born King of the Jews? for we have seen his star in the east, and are come to worship him" (Matt.2:2).

The Magi came to Jerusalem and inquired, *"Where is he that is born King of the Jews? For we have seen his star in the east..."* They referred to the star as *"his star"*—the star, as Balaam in his prophecy said, *"would come out of Jacob."*

Balak the king of Moab sent messengers to Prophet Balaam and promised to promote him to great honour if he would curse the people of Israel who, he thought, posed a threat to him. But God specifically told Balaam not to curse them because they were a blessed people. Therefore, Balaam did not curse them; instead, he blessed them. While he blessed them, he prophesied, *"I shall see him, but not now: I shall behold him, but not nigh: there shall come a Star out of Jacob, and a Sceptre shall rise out of Israel, ..."* (Numbers 24:17).

The Star was mentioned by Balaam as a prophecy about the birth of Jesus. Thus we see a close connection between the birth of Jesus and the glittering, guiding and guarding star which the wisemen saw.

A glittering Star

The connection between Christmas and a star is seen in the way Christians hang lumino...

decorative stars outside their homes and in malls during the Christmas season. But the true significance of a star can be understood only if we think of Jesus as the glittering star in the dark world of sin. Human race is plunged in the darkness of sin, and Jesus the Light of the world (John 8:12) sends forth beams of light like a star which shines brightly in the dark night.

Once Jesus took Peter, James and John to a high mountain and transfigured before them. At that time His face shone so brightly that the disciples could not stand before Him and so, they fell to the ground. But Jesus touched them and told them not to be afraid. Jesus the glittering Star allays all our fears and encourages us.

A guiding Star

"... lo, the star, which they saw in the east, went before them ... " (v.9).

The words 'went before them' indicate that it was a star which moved. The Magi had to travel from Jerusalem to Bethlehem, and they had only the star to guide them all the way.

In Acts Chapter 27 we read about the apostle Paul travelling to Italy by sea. The weather was inclement, and later, a fierce storm broke out. The ship was tossed about by a strong wind and heavy rain. There was not a single star in the sky to guide the ship and help the captain steer the ship to its destination. But today, even if the literal star is not seen in the sky, Jesus the Star is there to go before us and guide us.

Dr.F.B. Meyer wrote in a book about a spiritual lesson he learned through a nautical experience he had when he travelled from Dublin to Holy land Harbour. He wrote that it was a dark night and the voyage was extremely difficult. After they had made it to the harbour, he asked the captain how he found the harbour in such a dark night when the sky was without a single star. The captain pointed to three lights before them and said that those lights should be one behind the other to form a straight line, and that he would follow them steering the ship in line with them until the harbour came in view.

Dr. F.B. Meyer, a great man of God, remembered at once certain spiritual truths to which we should hold fast in our Christian walk, especially when we are completely enveloped in darkness with no star to guide us nor any light to show us the way. The truths are: 1. the light of the Word of God 2. the conviction of the Holy Spirit, and 3. the divinely arranged circumstances in which we are placed. These three are the three lights in alignment the captain spoke to him about. He understood how the three spiritual truths would act as a beacon light showing the way in one's spiritual darkness.

Jesus is the guiding Star in your life, and if you follow Him, you need not have any fear or worry because He goes before you showing you the way.

A guarding Star

The star which went before the wisemen stopped when they reached the house where the Child was. Verse 9 says, *"it came and stood over where the young child was."*

The function of the star which led the Magi by going before them changed to guarding the Child since it 'stood over' the place where He was.

Jesus the guarding Star gives you protection. He will keep you from the snares of the evil one. He will cover you with His feathers and keep you under His wings. He will see to it that no evil befalls you and no demonic foe comes near you. He will let no catastrophe affect your life, and He will watch over you as a mother watches over her darling child.

On this Christmas day claim the protection Jesus the guarding star has promised in the Bible.

THE GOVERNOR

"... for out of thee shall come a Governor, that shall rule my people Israel" (v.6).

"For unto us a Child is born and unto us a son is given: and the government shall be upon his shoulder: ..." (Isaiah 9:6).

The prophecy in Isaiah 9:6 was fulfilled at the birth of Jesus. The government of the spiritual kingdom was upon His shoulders.

What is the duty of a governor? The governor should feed his people, and fight for the innocent ones when they are unjustly punished.

Jesus feeds you

In Matthew 2:6 we find the word 'rule' but in the margin of the Bible the word 'feed' is given. We should therefore read the verse substituting the word 'feed' for 'rule'.

In Genesis chapter 45 we see how Joseph the son of Jacob became the governor of Egypt, and was second in command there. In the same chapter in verse 26 we see the children of Jacob informing their father about Joseph being the governor of Egypt. God had appointed Joseph as governor to feed not only the people of Egypt but those of other nations as well (Gen.42:5).

If you acknowledge Jesus as your Governor, He will feed you, and there will be no lack in your life. He will also feed you spiritually in the house of God, and your soul will be nourished by the Word of God.

He fights for you

During the time Jesus was walking the earth, Pilate was the Roman Governor, and when Jesus was arrested, He was taken before Pilate to be tried. Knowing that Jesus was innocent, Pilate tried hard to release Him and punish Barabbas instead. But, eventually the shouts of the crowd demanding the crucifixion of Jesus prevailed. Therefore, Pilate had to acquiesce, and he sentenced Him to be crucified according to the Roman custom.

Unlike Pilate the governor who was unsuccessful in defending Jesus in spite of knowing He was innocent, Jesus the Governor will fight on your behalf if you are just and pure in His sight.

THE CHILD

"And when they were come into the house, they saw the young child with Mary his mother, and fell down and worshipped him..." (v.11).

The Magi entered the house where Jesus the young Child was with His mother. They saw the Child, and, acknowledging Him as the King of the Jews, worshipped Him.

Even at birth the Son of God proved His humility. He was a humble and holy Child.

A humble Child

As a baby, He was wrapped in swaddling clothes and kept in a manger. It is paradoxical that the wisemen should worship the Child giving Him all honour due to a king, but, as a baby He was in a trough the cattle fed from and was found wrapped in rags. The royal Child was humble at birth and continued to be so till His death.

It is indeed sad in some Christian homes wives wrangle with their husbands and children, with their parents about not having new clothes to wear on Christmas day. Let such people remember that the One whose birth they are celebrating had no clothing worth its name. The fact that Jesus the King was humble should make you humble, and you should never murmur if your needs are not met.

A holy Child

The apostles of Jesus referred to Him as the *"Holy Child"* (Acts 4:30). No human being is holy as every one is born in sin. But as Jesus' mother conceived Him by the Holy Spirit, He was born without sin. He continued to be holy even after He had reached manhood, and therefore He could boldly say to the Jews, *"which of you*

convinceth me of sin?" (John 8:46). None can so boldly throw a challenge unless he is absolutely holy. The disciples knew the power of His holy name, and therefore they could pray for miracles in the name of Jesus the holy Child.

Dear children of God, you are called to be holy like Him, and therefore walk in His footsteps and be holy.

THE NAZARENE

"... that it might be fulfilled which was spoken by the prophets, He shall be called a Nazarene" (Matt.2:23).

As king Herod sought to kill Jesus the young Child, Joseph was instructed by an angel of God to take the Child to Egypt and remain there until he would bring him word. When Herod was dead, the angel again appeared to him in a dream and told him to take Mary and the Child to the land of Israel. Since Herod's son was reigning in Judea, Joseph went to Galilee and chose to live in the city called Nazareth. He was therefore called a Nazarene, and the prophecy that He would be called so was fulfilled.

'Jesus of Nazareth' is the name by which He has often been referred to. The name above all names has power over disease, demons and death.

Power over disease

God anointed Jesus of Nazareth with the Holy Ghost and power and He went about doing good, and healing all manner of sickness (Acts 10:38).

In Acts chapter 3 we read about a miracle taking place in the name of Jesus of Nazareth. Peter and John went to the temple, and there they found a man cripple from birth begging at the gate called Beautiful. When he asked them for alms, Peter said, *"silver and gold have I none... In the name of Jesus of Nazareth rise up and walk"* (v.6). The very same moment the man jumped up and walked. This miracle happened in the name of Jesus of Nazareth, which cures countless number of people of incurable diseases even today.

Power over demons

A large part of the ministry of Jesus was spent in casting out evil spirits. In Mark 1:23 we read about His casting out an unclean spirit from a man in the synagogue. We also read that He had cast out seven devils from Mary Magdalene (Mark 16:10). The Gospels record many incidents of Jesus delivering those oppressed by evil spirits.

Just before His ascension Jesus said, *"... In my name shall they* (believers) *cast out devils ..."* If you are a believer, you need not worry about Satan or be oppressed by his vile tactics. You need to fight boldly against the chief devil and his demons in the name of Jesus as well as with weapons of spiritual warfare, namely, the Word of God and the blood Jesus shed on Calvary.

The power of Jesus over demons is given to you as His legacy. Use it in His name and for His glory.

Power over death

Jesus was crucified, dead and buried, but He rose from the dead on the third day. The grave could not hold Him any longer since He overcame death by His power. To the women who went to the tomb to anoint the body of Jesus, the angels said, *"He is not here; but is risen: ..."* (Luke 24:6). Jesus of Nazareth has the power to quicken our mortal bodies and make us rise from the grave when He comes with His saints to gather His treasure.

Jesus was born two thousand years ago and He is alive even today. We see Him in the Scriptures as the King of kings, the Star, the Governor, the Child and the Nazarene. On this Christmas day accept Him as your King and Governor. Let Him be the Star that guides and guards you. Exercise the power in His name over disease and demons and be holy like the Child all through your life.

ஊழியர் பகுதி

ஜெபவீரன் ஜான் ஹைடு

10 கிறிஸ்துவுக்கு உகந்த பாத்திரம்

(தொடர்ச்சி)

இவ்வளவு வல்லமையான, தூய ஆவியான வரின் நிறைவுபெற்ற வாழ்க்கை அநுபவத்தை ஜான் ஹைடு எவ்விதம் பெற்றுக்கொண்டார்? தன் ஜீவியம் முழுவதையும் ஆண்டவரின் திருப்பணிக் கென்றே பிரதிஷ்டைபண்ணுவதற்கு அவரைத் தூண்டியது யாது? ஜெப ஜீவியத்தின் இரகசியத்தை அவர் எவ்வாறு கற்றுக்கொண்டார்? இந்தக் கேள்வி கள் அவருடன் நெருங்கிப் பழகிய மிஷனெரிமார் கள், திருப்பணியாளர்கள் மனதில் எழுந்தது இயற்கையே.

ஆனால் அவரிடமிருந்து இவற்றிற்குப் பதில் கிடைப்பது மிகக் கஷ்டம். ஏனெனில், ஜான் ஹைடு தன்னைப்பற்றியோ, தன் ஜெப அநுபவத் தைப்பற்றியோ, தன் அந்தரங்க ஆன்மீக ஜீவியத் தைப் பற்றியோ எவரிடமும் பேசுபவரோ, பேச விரும்புபவரோ அல்ல. ஆனால் கிறிஸ்துவின் ஜெப ஜீவியத்தையே இடைவிடாது பிரதிபலித்துக் கொண்டிருந்த ஜான் ஹைடுவையும், ஆத்துமாக் களுக்காக அவர் கொண்டிருந்த பாரத்தையும் கண் ணுற்ற பெங்வெர்ன் ஜோன்ஸ் எப்படியாயினும் இந்த அற்புத மனிதரைப்பற்றி அதிகமாய்த் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் மேலே கூறப்பட்ட கேள்விகளை ஒரு சமயம் அவரிடம் நேரில் கேட்டு விட்டார்.

ஜான் ஹைடு, தனது கிறிஸ்தவ பக்தி வாழ்க்கைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்த தம் அருமைப் பெற்றோர்கள் தனக்கு நல்ல முன்மாதிரியாக இருந்தனர் என்று மகிழ்ச்சியுடனும், நன்றியுணர்ச்சியுடனும் கூறினார். அவருடைய தந்தையார் பிரஸ்பிடேரியன் திருச்சபையில் (Presbyterian Church) ஒரு நல்ல போதகராக அநேக ஆண்டுகள் பணியாற்றியவர். ஜான் ஹைடுவின் தாயார் தன் கணவரின் திருப்பணியில் அவருக்குப் பக்கபலமாக இருந்து அவருக்கு ஊக்கமும், ஒத்துழைப்பும் கொடுத்தார்.

ஆண்டவர் அந்த அம்மாளுக்கு மிக இனிமை யான குரலாகிய தாலந்தைக் கொடுத்திருந்தார். அவர்கள் அந்த வரத்தை இரட்சகர் இயேசுவின் மகிமைக்கென்றே அர்ப்பணித்து, உள்ளப் பரவசத் துடன் துதி தோத்திரப் பாட்டுகள் பாடுவதில் மன நிறைவு பெற்றதுடன், தன் பிள்ளைகளுக்குச் சிறந்த முன்மாதிரியாகவும் இருந்தார்கள். இத்தகைய ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பத்தில் வளர்ந்த ஜான் ஹைடுவின் மனதில் தான் ஒரு மிஷனெரியாக இந்தியாவுக்குச் சென்று, கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் ஊழியம் செய்து, அவர்களை இரட்சகருக்கென்று ஆதாயப்படுத்தவேண்டும் என்ற நோக்கமும் பேராவலும் வேரூன்றியது.

ஆனால், மிகவும் இளைஞராக இருந்த காலத் தில் தான் இன்னும் அதிகமாகப் பக்குவப்பட வேண்டிய நிலையில் இருந்ததாக அவர் தன்னைப் பற்றிக் கூறியுள்ளார். அவர் கல்லூரியில் சேர்ந்து சிறப்பாகக் கல்விபயின்று, பட்டப்படிப்பையும் முடித்தார். தான் பெற்ற இளநிலைப்பட்டம் (B.A. degree) குறித்து அவர் சற்று பெருமைப்பட்டுக் கொண்டதுண்டாம். தன்னைப்பற்றி அவர் கூறி யுள்ள சாட்சியின் மூலம் அவருடைய தாழ்மையை யும் அவர் எவ்வாறு படிப்படியாகத் தன்னை வெறுமையாக்கி, தன் ஜீவியத்தில் அவர் (கிறிஸ்து) பெருகவும், தான் சிறுகவும் வேண்டும் என்ற நோக்கத்துடன் தன்னை முழுமையாக ஆண்ட வருக்கென்றும் அவரின் சேவைக்கென்றும் அர்ப் பணித்து, அவரால் ஆட்கொள்ளப்பட்டார் என்பதை யும் நாம் காண்கிறோம்.

அவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பணியையே தன் வாழ்க்கையின் குறிக்கோளாகத் தெரிந்து கொண்டதைப்பற்றி அறிஞர் ஜே. பெங்வெர்ன் ஜோன்ஸ் அவரிடம் தன் உள்ளம் திறந்து சில விபரங்களைக் கூறியுள்ளார். அவை பக்தன் ஜான் ஹைடுவின் உண்மையான தற்பரிசோதனையின் அடிப்படையிலும், திருப்பணிக்கு எவ்விதத்திலும் பாத்திரன் அல்லாத தன்னை ஆண்டவர் கிறிஸ்து தாமே சித்தங்கொண்டு கிருபையாய் உபயோகித்து வருகிறார் என்பதான மனப்பான்மையிலும் அமைந் திருப்பதை நாம் காணலாம். மேற்சொல்லப்பட்ட தன் மிஷனெரி திருப்பணியின் ஆரம்பம்பற்றி சொன்ன சாட்சியை, அவர் சொன்ன வண்ணமே நாம் இங்கே எடுத்துக் கூறுகிறோம்:

"நான் வாலிபனாக இருக்கும்போதே ஒரு நல்ல திருப்பணியாளனாக ஆக வேண்டும்; ஒரு தலைசிறந்த மிஷனெரியாக விளங்கவேண்டும் என்ற பேராவல் கொண்டேன். அதற்காகவே கல்லூரிப் படிப்பைத் தெரிந்துகொண்டு, கல்வி பயின்று, பட்டமும் பெற்றேன். நான் இந்திய நாட்டில் திருப்பணி புரிவதற்குத் தகுதிபெறுவதற்காக இந்திய மொழிகள் அனைத்தையும் ஐயந்திரிபற, திறன்படக் கற்றுக்கொள்ளவேண்டும் என்றும், என் இலட்சியத்திற்கு யாதொரு இடையூறும் குறுக்கிடக்கூடாது என்றும் மனஉறுதி பூண்டேன். ஆனால் என்னுடைய இந்தப் பேராவல் அச்சமயத்தில், பெரும்பாலும் உலகப் பிரகாரமான ஓர் ஆசையாகவே இருந்தது என்பதை இப்போது நான் உணர்கின்றேன். நான் என் ஆண்டவரை நேசித்ததும் அவருக்குச் சேவை செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டதும் உண்மையே; ஆனால் இந்த ஆசை, 'நான்', 'என்னுடைய' என்ற குறுகிய சுயவிருப்பங்களையே அஸ்திபாரமாகக் கொண்டிருந்தது.

"என் தந்தைக்குப் பாசமிக்க ஒரு நண்பர் இருந்தார். அவர் என் தந்தையின் சகதிருப்பணியாளரான ஒரு போதகர். வெளிநாட்டுக்கு ஒரு மிஷனெரியாகச் சென்று பணியாற்றவேண்டும் என்ற அவருடைய விருப்பம் நிறைவேறவில்லை. நான் ஒரு மிஷனெரியாக இந்தியாவுக்குச் செல்ல ஆயத்தப்படுகிறேன் என்பதை அறிந்ததும் அவர் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். தான் விரும்பியும் அடைய முடியாத இலட்சியம் தன் அருமை நண்பருடைய மைந்தனில் நிறைவேறுகிறது என்ற மனநிறைவுடன் அவர் என்னை மிகவும் பாராட்டினார். நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் முன்னிலும் அதிகமாக நேசித்தோம். நான் அப்போதகரின் உயர்ந்த பண்பையும் அவர் என்மேல் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பையும் நன்றிப் பெருக்குடன் வியந்து பாராட்டினேன்.

"இந்தியாவில் நான் செய்யப்போகும் என் வாழ்க்கைப் பணியை முன்னோக்கி என் பயணத்தை மேற்கொண்டு, நியூயார்க் நகரில் நான் கப்பலேறிய அந்நாளில் என் கப்பலறையில் எனக்கு எழுதப்பட்டிருந்த கடிதம் ஒன்றைக் கண்டேன். உடனே அதைப் பிரித்துப்படித்தேன். அது மிகச் சுருக்கமான ஒரு கடிதம்தான். அதன் சாராம்சமாவது: 'என் அன்புமிக்க ஜான் அறிய வேண்டியது: நீ பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும்வரை நான் இடைவிடாது உனக்காக ஜெபித்துக்கொண்டேயிருப்பேன்' என்பதே. என் பெருமையுணர்வு கொதிப்படைந்தது. நான் பெரிதும் சினமுற்றேன். அக்கடிதத்தைக் கசக்கி அறையின் மூலையில் வீசியெறிந்துவிட்டு, கடுங்கோப ஆவியுடன் கப்பலின் மேலறைக்குச் சென்றேன்.

"எப்படி இந்த மனிதர் எனக்கு இவ்வாறு எழுதலாம்? இதன் அர்த்தம் என்ன? அப்படியானால் இன்னும் நான் ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளவில்லையா? ஒரு தலைசிறந்த மிஷனெரியாகப் பணியாற்றவேண்டும் என்ற மனஉறுதியுடன் நான் புறப்பட்டுச் செல்கின்றேன். இவரோ நான் இன்னும் அதற்குப் பக்குவப்படவில்லையென்றும், தகுதி பெற்றுக்கொள்ளவில்லை என்றும் குறையல்லவோ கூறுகிறார் என்று நினைத்து, என் உள்ளத்தில் ஒரு போராட்டம் நடந்துகொண்டிருக்க, மனக்குழப்பத்துடன் குறுக்கும் நெடுக்குமாகப் பல தடவைகள் நடந்தேன். மிகுந்த மனபாரத்தை உணர்ந்தேன்.

"அக்கடிதத்தை எழுதியிருந்த போதகர் என் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர். அவருடைய பக்தியும், அன்பும் நிறைந்த தூய வாழ்க்கையை நான் அறிந்தவன். என் உள்ளத்தின் ஆழத்தில் அவர் சொல்வது சரியே என்றும், நான் இன்னும் மிஷனெரி திருப்பணிக்குரிய பக்குவம் பெறவில்லை என்றும் உணர்ந்தேன். சற்று மன அமைதியுடன் சிந்தனை செய்துவிட்டு என் அறைக்கு ஓடினேன். என் முழங்கால்களை மடக்கிக் குனிந்து என்னால் கசக்கி எறியப்பட்ட கடிதத்தைத் தேடியெடுத்தேன். கடிதத்தின் மடிப்புகளை நீக்கிச் சரி செய்து, அதைத் திரும்பத் திரும்ப வாசித்தேன். என் தந்தையின் நண்பர் தன் கடிதத்தில் கூறியது உண்மையே என்பதையும், நான் என்னைப்பற்றி நினைத்த உயர்வான எண்ணம் முற்றிலும் தவறானது என்பதையும் தெளிவாக உணர்ந்தேன்.

"இந்த மனநிலையில் நான் இரண்டு, மூன்று நாட்களிருந்தேன். எனக்குள் சமாதானம் இல்லை. இவ்வாறான என் துன்பமும், மனப்போராட்டமும், ஆண்டவர் கிருபையாக என் தந்தையின் நண்பருடைய ஜெபத்தைக் கேட்கிறார் என்பதற்கு அடையாளங்கள் என்றும், பெருமை, சுயம் என்ற தீய ஆவிகள்மேல் நான் வெற்றி பெறவேண்டும் என்பதே அவருடைய விருப்பம் என்றும் என் உள்ளத்தில் நிச்சயித்துக்கொண்டேன்.

“கடைசியில் இனி நான் செய்ய வேண்டியது என்ன என்பதை அறியாது திகைத்து நின்ற நிலையில், “ஆண்டவரே! என்னை உம்முடைய தூய ஆவியானவரால் நிரப்பியருளும்” என்று ஜெபித்து மன்றாடினேன். இப்படி நான் செய்த நிமிஷத்திலேயே என் உள்ளத்தில் ஒரு மாபெரும் அமைதி ஏற்பட்டது. விவரிக்கவொண்ணாத தெளிவும் சமாதானமும் என்னை ஆட்கொண்டதாக உணர்ந்தேன். என்னையே உள்நோக்கிப் பார்த்து, உள்ளபடியே என்னை நான் அறிந்துகொள்ள முயன்றேன். பேராசையில் தோன்றிய என் திட்டங்களைக்குறித்துச் சிந்தித்தேன். பிரயாணம் முழுவதிலும் என்னைப் பற்றிய தீவிர தற்பரிசோதனையிலேயே என் மனம் ஈடுபட்டிருந்தது.

“நான் இந்திய நாட்டின் கரையை அடையு முன்பே ஒரு திடமான முடிவுக்கு வந்தேன். அதாவது, முதலாவதாக நான் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டே ஆகவேண்டும்; இது மிக அத்தியாவசியம். இதுவே நான் என் ஆண்டவரிடம் முதலாவதாக அடிபணிந்ததாகும். இரண்டாவதாக, நான் மறுபடியும் சரணாகதியடைந்து, அவருடன் பேசி, ‘ஆண்டவரே, என் விருப்பப்படி ஒன்றும்வேண்டாம். இந்தியமொழிகள் பரீட்சைகளில் நான் தேறாவிட்டாலும் பரவாயில்லை. உமக்குச் சித்தமானால், அந்நாட்டில் தூரத்திலுள்ள ஏதாவதொரு சிறிய பிரதேசத்தில் உமக்காக ஒரு சாதாரண ஊழியனாக உண்மையாய்ச் சேவை செய்யக்காத்திருக்கிறேன். உமக்காக நான் எதுவாக இருக்கவும், எதைச் செய்யவும் தயாராயிருக்கிறேன். உமது தூய ஆவியானவரால்மட்டும் என்னை நிரப்பியருளும்’ என்று கெஞ்சிக்கதறினேன்.

“நான் இந்தியாவிற்கு வந்து அப்போது சில நாட்களே ஆகியிருந்தன. நான் மற்றொரு மிஷனெரி சகோதரருடன் தங்கியிருந்தேன். அவர் திருப்பணியில் சில ஆண்டுகள் அனுபவம் பெற்றிருந்தார். ஒருநாள் நான் அவருடன் ஒரு திறந்தவெளி ஆராதனைக்கு (open air service) சென்றிருந்தேன். அவ்வேளையில் அவரே மீட்பின் நற்செய்தியைப் பிரசங்கித்தார். அவர் பேசி முடித்ததும், அங்கே வந்திருந்த கண்ணியமான தோற்றத்துடன் தோன்றிய ஒரு மனிதர், அருளுரையாற்றிய அந்த மிஷனெரி சகோதரரைப் பார்த்து ஆங்கிலமொழியில், ‘ஐயா, நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?’ என்று கேட்டார். அச்சொற்கள் என் உள்ளத்தைத் தொட்டன. இன்னும் என் ஜீவியத்திலிருந்து நீக்கப்படவேண்டிய பாவம் இருக்கின்றதே! பாவத்திலிருந்து மீட்கப்படாத நானே இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிற மக்கள் முன்நின்று, ‘அவர் உங்களுக்குப் பரிபூரண இரட்சகராய் இருக்கிறார்’ என்று அறிவிப்பது, ஆண்டவரின் நாமத்தைக் கேலிக்கும் நிந்தனைக்கும் உட்படுத்துவதாகுமே என்று நினைத்து என் மனதில் கலக்கமுற்றேன்.

“இந்த நிலையில் நான் என்னுடைய அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டு, ஆண்டவரிடம் நேருக்கு நேர் உரையாடத் தீர்மானித்து, பேராவலுடன் முழங்காற்படியிட்டு ஜெபித்தேன். அவருடன் பேசி, ‘என் தேவனே, என்னையும் என் மனச்சமாதானமின்மையையும் கண்ணோக்கிப் பாரும். எனக்கு ஏன் இந்தப் பாரமும், போராட்டமும்? ஒன்று என்னுடைய எல்லாப் பாவங்கள் மீதும் எனக்குப் பூரண ஜெயம் தாரும்; அல்லது நான் அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்று அங்கே வேறொரு பணியைத் தெரிந்துகொள்ளவேண்டும். என்னுடைய சொந்த வாழ்க்கையிலேயே சுவிசேஷத்தின் வல்லமை செயல்படுகிறது என்று நான் சாட்சி சொல்ல முடியாத நிலையில் அதை நான் மற்றவர்களுக்குப் போதிப்பது முற்றிலும் தவறு’ என்று சொல்லி முறையிட்டு, மிகுந்த பாரத்துடன் ஜெப நிலையிலேயே சற்று நேரம் இருந்தேன்.

“அப்போது இரட்சகர் இயேசு கிறிஸ்து என்னுடன் பேசுவதை என் உள்ளத்தில் கேட்டேன். அவர்தாம் எல்லாம் வல்லவராக இருக்கிறார் என்றும், என்னுடைய எல்லாப் பாவங்களினின்றும் என்னை விடுவிப்பதாக எனக்கு வாக்குறுதியளித்ததோடு, நான் இந்தியாவில் செய்ய வேண்டிய திருப்பணியைத் தாமே எனக்கு நியமித்திருப்பதாகவும் சொல்லி என்னைத் திடப்படுத்தினார்.

“அவர் நிச்சயமாகவே என் பாவங்களிலிருந்து எனக்கு விடுதலை தந்தார். அந்நாளிலிருந்து எனக்கு இதைப்பற்றிச் சந்தேகமே எழுந்ததில்லை. அவர் எனக்கு அளித்த வெற்றி குறித்து இப்போது நான் சற்றும் தயக்கமில்லாமல் சாட்சி பகர முடியும். அவ்வாறு சாட்சி சொல்வதில் நான் பேரானந்தம் அடைகிறேன். என் நேசர் இயேசு எனக்கு அளித்த வாக்குறுதியை அனுதினமும் நிறைவேற்றுவதில்

உண்மையும் நீதியும் உள்ளவராக இருக்கிறார் என்று கூறும் பெரும் பாக்கியம் பெற்றிருக்கிறேன்."

மேற்கண்டவாறு தன் சொந்த அநுபவத்தை, பக்தன் ஹைடு மிகத் தெளிவாக எடுத்துக்கூறி யிருக்கிறார். இந்தச் சாட்சியை அவர் பெருமிதத்து டன் அறிவிக்கும்போது அவர் முகத்தில் ஆனந்த புன்முறுவலும், இரட்சிப்பின் நிச்சயத்தைப் பிரதி பலித்த ஒரு பேரொளியும் காணப்பட்டதாக அறிஞர் பெங்வெர்ன் ஜோன்ஸ் அவர்கள் மூலம் நாம் அறிகி றோம்.

மேலான, புனிதமான நோக்கங்களால் நாம் ஏவப்பட்டுச் செயலாற்ற நினைக்கும்போதுகூட சாத்தான் தன் கைவரிசையைக் காட்டி, நயவஞ்சக மாய் நம்மைத் திசை திருப்ப முயற்சிக்கிறான் என் பதை நாம் ஜெபவீரன் ஜான் ஹைடுவின் வாழ்க்கை யிலேயே காண்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாம் தெரிந்துகொண்ட தம் அடியானின் குறைபாடுகளை அவருக்கு வெளிப்படுத்தி, ஆன் மீகத்துறையில் அவருக்கு ஓர் அதிர்ச்சி ஏற்படும்படி செய்தார். உடனே அவர் ஆண்டவரின் பாதங்க ளண்டை வந்து அவருடன் ஜெபத்தில் தனித் திருந்து உரையாடியதன்மூலம் நல்லுணர்வு அடைந்து, இரட்சகரின் அருள் பெற்றார்.

ஆண்டவருடன் தனித்திருந்து ஜெபித்து, அவர் நம்முடன் பேசக் காத்திருத்தலாகிய அநு பவம் முழுநேரமிஷனெரி ஊழியர்களுக்கும், மற் றும் திருப்பணியாளர்களுக்கும்மட்டும் அல்லா மல், பிற அலுவல்களில் ஈடுபட்டுள்ள அனை வருக்கும், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற எல்லாருக்கும், எல்லா விசுவாசிகளுக்கும் மிகவும் இன்றியமையாதது.

நம் இரட்சகரிடம் நெருங்கிவந்து அவரிடம் நம் பாரங்களையும், மனக்கஷ்டங்களையும் சொல்லி, அவருடைய ஒத்தாசையையும், கிருபையையும் வேண்டி மன்றாடும்போது, அன்பு நிறைந்த அவர் நம்மீது மனமிரங்கி எல்லா நெருக்கடிகளையும் மேற்கொள்ள நமக்கு வல்லமை தருகிறார். அவ ரன்றி நாம் ஒன்றுமில்லை; நாம் யாதும் செய்ய சக்தியற்றவர்கள். இதைத் தெளிவாய் அறிந்து அவ ரிடம் நாம் தஞ்சம் புகுவதன்மூலம், பிரச்சினைகள் மத்தியிலும் அவசரப்படாமல் நாம் சிறந்த வெற்றி வாழ்க்கை வாழலாம்.

(தொடரும்)

வேத பாடம்

சாலொமோனின் உன்னதப்பாட்டு

தொடர்ச்சி

பாடம் 10

(உன்னதப்பாட்டு 3:1-2)

மணவாட்டி தனது நேசர்மீதுள்ள தள்ளாடுகிற அன்பிலிருந்து மீண்டு, தனது ஆதி அன்பிற்குள் வருகிறதை இவ்வசனங்கள் நமக்குத் தெளிவு படுத்துகின்றன.

1 ஆம் வசனம்

"இராக்காலங்களில் என் படுக்கையிலே என் ஆத்தும நேசரைத் தேடினேன்; தேடியும் நான் அவரைக் காணவில்லை" (உன்.3:1).

'இராக்காலங்கள்' என்ற சொல்லை ஆங்கில வேதாகமம் 'இராக்காலம்' என்று ஒருமையில் கூறு கின்றது. ஆனால், *'இராக்காலங்கள்'* என்றுள்ள சொல்தான் மூலபாஷையில் காணப்படுகின்றது. 'இராக்காலங்கள்' என்ற சொல் சோதனை காலங் களைக் குறிப்பன. மணவாட்டி தன் நேசரைவிட்டுச் சில நாட்கள் பிரிந்து வாழ்ந்ததை, இவ்வசனம் தெளிவுபடுத்துகின்றது. எவ்வளவு காலம் என்பதை நாம் சரியாக நிர்ணயிக்கமுடியாது. எனினும், அவள் நேசரைவிட்டுச் சில நாட்கள் விலகியிருந்திருப் பாள் என்பதை நாம் யூகிக்கலாம்.

மணவாளன் தமது அன்பால் தன்னைத் தொடர்ந்து அழைப்பதை மணவாட்டி உணர்ந் தாள். அதனால்தான் நேசரும் அவளது அன்பின் ஏக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு, தம்மிடமாய் அவளை இழுக்க முயன்றார். இன்றும் அநேகர் மணவாளனாம் இயேசுவை முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும் தேடு கிறதில்லை.

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப் படும்" (மத்.6:33) என்றார் இயேசு.

சில விசுவாசிகள் *'கூடக் கொடுக்கப்படும்'* காரியங்களைப் பெற்றுக்கொள்ளும்படியாகத்தான் தேவனைத் தேடுகின்றனர். கடமைக்காகவும், ஏதோ

ஒரு உள்நோக்கத்தோடும் தேவனைத் தேடுகின்றவர் பலர். இது சரியன்று. அன்பான விசுவாசிகளே! நீங்கள் தேவனை எப்படித் தேடுகிறீர்கள்? ஆராயவும்.

"நான் படுத்துக்கொள்ளுகிறபோது, எப்பொழுது எழுந்திருப்பேன்? இராக்காலம் எப்பொழுது முடியும் என்று சொல்லி, கிழக்கு வெளுக்கு மட்டும் அரண்டு புரளுகிறதினால் எனக்குப் போதுமென்று போகிறது" (யோபு 7:4).

யோபின் சோதனைக் காலமாகிய இராக்காலத்தை இங்குக் காண்கிறோம். இராக்காலம் எப்பொழுது முடியும்? என்றுள்ள சரீர வேதனையில் அவன் காணப்பட்டான். ஒவ்வொரு இரவிலும் அவன் சரீரத்தில் மிகுந்த உபத்திரவத்தை அநுபவித்து, வேதனையுடனும் துக்கத்துடனும், பரிதாப நிலையிலும் நாட்களைக் கடத்திவந்தான்.

அன்பானவர்களே! கிறிஸ்தவ வாழ்க்கையிலே, *'இராக்காலம்'* என்றுள்ள சோதனைக்காலம் அனைவருக்கும் நிச்சயமாக உண்டு. இவ்வித இராக்காலங்கள் தேவனைத்தேட தடை செய்பவையாகும். சிலர் இவ்வித சோதனைக் காலங்களில்தான் கர்த்தரை நெருங்கவும் முற்படுகின்றனர். மற்றும் சிலர் இவ்வித சோதனைக் காலங்களில் தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கவும் தேவனைக் குறை கூறவும் செய்கின்றனர்.

"இராக்காலங்களில் என் படுக்கையிலே ... தேடினேன்" என்றாள் மணவாட்டி. *'படுக்கை'* என்பது சுகபோக வாழ்க்கையைக் குறிக்கிறது. இம்மை வாழ்வுக்காக இயேசுவைத் தேடுகிறவர்கள் பரிதபிக்கப்படத்தக்கவர் என்று வேதம் கூறுகிறது (1 கொரி.15:19).

"கதவு கீல்முளையில் ஆடுகிறதுபோல, சோம்பேறியும் படுக்கையில் ஆடிக்கொண்டிருக்கிறான்" (நீதி.26:14).

அடுத்து, இராக்காலத்துப் படுக்கை என்பது சோம்பேறித்தனத்தைக் குறிக்கின்றது. நல்ல வசதிகளோடுகூட, சுகபோகமாக வாழ்கின்ற வாழ்க்கை இது. *"சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்"* (1 தீமோ.5:6) என்றுள்ள வசனம் விசுவாசிகளுக்கோர் எச்சரிப்பாய் அமையட்டும்.

இவ்வசனம் பெண்பாலில் கூறப்பட்டிருப்பினும், ஆண்பாலருக்கும் ஏற்றதாகும். சுகபோகமாக வாழும் விசுவாசிகள் உயிரோடே வாழினும் செத்த நிலைமைக்கே ஒப்பாவர். மணவாட்டி தன் படுக்கையிலே தன் நேசரைத் தேடினது, அவளது சுகபோக வாழ்க்கையையும், நேசரைத் தேடவேண்டிய முறையில் தேடாததையும் குறிக்கும்.

அன்பு சகோதரரே! நீங்கள் இவ்வுலகில் எவ்வாறு வாழ்கிறீர்கள்? இக்கட்டுகளிலும் சோதனைகளிலும் வாழ்கிறீர்களா? அன்றி, சிற்றின்பத்தில் மூழ்கி, தேவனுடைய நல்லுறவைக் கெடுத்து, சுகபோகமாய் வாழ்கிறீர்களா? ஆராயவும்.

மூன்றாவதாக, *'இராக்காலம்'* என்பது ஓர் பயங்கரமான நேரத்தைக் குறிக்கின்றது. சூரியன் அஸ்தமிக்கும் வேளை அது. மணவாட்டியின் தனிமையின் நேரம் அது. அவளுக்குப் பிரச்சினை மிகுந்த நேரம் அது. ஏனெனின், அந்நேரத்தில் மணவாளன் அவளோடு இல்லை. இந்த இராக்காலத்தில் மணவாட்டி, பயம் கவ்விய ஓர் அநுபவத்துக்குள் சென்றாள். மணவாளனது சமுகத்தை இழந்து தவித்தாள்.

அன்பானவர்களே! மணவாளனாம் இயேசுவின் சமுகத்தை இழந்து வாழ்வதுபோன்ற ஒரு பரிதாபம் வேறு ஏதும் இருக்கமுடியாது. தேவ பிரசன்னத்தை, தேவனது நல்லுறவை இழந்து தவிக்கும் காலம், மன நிம்மதியைச் சீர்குலைக்கும் காலமாகும்.

உலகில் மிகுந்த செல்வத்தையும், பொருட்களையும் இழந்தால், மீண்டும் அவற்றைப் பெற்றுக் கொள்வது எளிது. ஆயின், விசுவாசிகள் தேவனது சமுகத்தை இழந்தால் அதனைப் பெற்றுக்கொள்வது அரிது. அது ஒரு துர்ப்பாக்கியமான அநுபவம். அது சொல்லில் அடங்காத ஒன்று. ஆபத்து நிரம்பியது. மணவாட்டி இராக்காலத்தில் நேசரைத் தேடினாற்போல, விசுவாசிகள் மணவாளனாம் இயேசுவைத் தேடாது, எப்போதும் அவரது சமுக உணர்வோடு இருக்கப் பிரயாசப்படுவீர்களாக.

2 ஆம் வசனம்

"நான் எழுந்து நகரத்தின் வீதிகளிலும் தெருக்களிலும் திரிந்து, என் ஆத்தும நேசரைத் தேடுவேன் என்றேன்; தேடியும் நான் அவரைக் காணவில்லை" (உன்.3:2).

"நான் எழுந்து" என்றுள்ள சொற்களைக் கவனிக்கவும். இது, *"நான் எழுந்து, என் த*

இடத்திற்குப் போய்'' என்று கெட்ட குமாரன் கூறி தற்கு ஒப்பானது அன்று. அதாவது, ஒரு பாவி னந்திரும்பி, இயேசுவிடம் வந்து தன்னை ஒப்புக் கொடுப்பதை இது குறிக்கவில்லை. விசுவாசிகள் ங்களது பின்மாறிப்போன அநுபவத்திலிருந்து ணவாளனாம் இயேசுவைச் சந்திப்பதற்காக எழும் நிலையையே இது சுட்டிக்காட்டுகின்றது.

"நான் எழுந்து .... தேடுவேன்" என்று மண வாட்டி கூறியுள்ளது, தான் திரும்ப எழுவதற்காக டுக்கும் தீர்மானத்தைக் குறிப்பது. இன்னும் அவள் படுக்கையை விட்டு—தன் சுகபோக வாழ்க் கையைவிட்டு—எழுந்து, தனக்குரிய இளைப்பாறும் இடத்தைக் கண்டுகொள்ளவில்லை. ஒரு தீர்மானத் தைப் படுக்கையிலிருந்துகொண்டே எடுத்தாள் என்பதைத்தான் இங்கு அறியமுடிகிறது.

உன்னதப்பாட்டு 2 ஆம் அதிகாரம் 10, 13 ஆம் வசனங்களில் நேசர், *"என் பிரியமே, என் ரூப வதியே, நீ எழுந்துவா"* என்று மணவாட்டியை அழைத்தபோதே, மணவாட்டி எழுந்திருந்திருக்க வேண்டியது அவசியம். அவளோ பொய்யான திருப்தியோடு அப்போது வாழ்ந்தாள். நேசரின் சத்தத்தை முறையாகக் கேட்டுக் கீழ்ப்படிய வில்லை. அதனால்தான் சோதனை மிகுந்த இராக் காலங்களில் அவள் சிக்கிக்கொண்டாள். இப்போது தான், "என் சிற்றின்பங்களை விட்டு, சோதனை களை எதிர்த்து எழும்புவேன்" என்றுள்ள ஒரு தீர்மானத்துக்குள் வந்தாள்.

அன்பான விசுவாசிகளே! இன்று இதனை வாசித்துக்கொண்டிக்கும் வேளையில்தான் உங்களது சுகபோக வாழ்க்கையை, உங்களது சிற்றின்பங்களைவிடத் தீர்மானியுங்கள். "எல் லாச் சூழ்நிலைகளிலும் இயேசுவைப் பின் பற்றுவேன். இயேசுவோடுகூட இளைப்பாறு தலைப்பெற்று அநுபவிக்க வாஞ்சிப்பேன்" என்று கூறுங்கள். இப்போதே எழும்புங்கள்.

'நகரத்தின் வீதிகளிலும், தெருக்களிலும் திரிந்து'

'நகரம்' என்பது இரட்சிக்கப்படாதவர்களும் இரட்சிக்கப்பட்டவர்களும் ஒருங்கே வாழுமிடம் ஆகும். *"நகரம்"* என்ற சொல் எருசலேமைக் குறிக் கிறது என்றும் சிலர் வியாக்கியானிக்கின்றனர். மணவாட்டி இரட்சிக்கப்படாத மக்கள் மத்தியிலே நேசரைத் தேடமுடியுமா? நகரத்திலுள்ள அனை வரும் உலகத்தைவிட்டுப் பிரிந்து வாழ்பவரா? அவர்கள் பெயரளவில் கிறிஸ்தவர்களாய் வாழு பவர் அன்றோ?

'வீதிகளும்', 'தெருக்களும்' உலகோடு ஒத்து வாழும் மக்களைத்தான் குறிப்பிடுகின்றன. இவர் களும் மணவாட்டியின் அழைப்புக்குப் பாத்திரர் அல்லர். விசுவாசியின் வாழ்க்கை உலகைவிட்டுப் பிரிந்து வாழும் வாழ்க்கை ஆகும். பழைய பாவ வாழ்க்கையைவிட்டு, மணவாளனாம் இயேசுவுக்குப் பிரியமாக வாழும் ஒரு வாழ்க்கை ஆகும். வீதி களும் தெருக்களும் பழைய வாழ்க்கைக்கு ஒப் பானவை என்பதை விசுவாசிகள் மனதிற்கொள்ள வேண்டும்.

*"**முன்னே** அந்நியராயும் துர்க்கிரியைகளி னால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களை யும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்குமுன் நிறுத் தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்"* (கொலோ 1:21).

"இவைகளின்பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும்.

*நீங்களும் **முற்காலத்தில்** அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்துகொண்டு வந்தீர்கள்"* (கொலோ.3:6,7).

*"**சென்ற வாழ்நாட் காலத்திலே** நாம் புற ஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண் டதுபோதும்; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப் பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம்"* (1 பேதுரு 4:3).

*"அவைகளில் நீங்கள் **முற்காலத்திலே** இவ் வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படி யாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்.*

*அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் **முற்காலத் திலே** நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்"* (எபே.2:2,3).

'முன்னே', 'முற்காலத்தில்', 'சென்ற வாழ்நாட் காலத்திலே' என்றுள்ள சொற்களை நன்கு கவனிக்கவும். ஆம், இவைகள் இரட்சிக்கப்படாத முன்னர் ஒரு விசுவாசிக்குள்காணும் அனுபவம். இப்போதோ சபையாகிய விசுவாசிகள் அவற்றை விடுத்து வெளியே வந்து, இயேசுவைப் பற்றிக்கொண்டனர்.

மணவாட்டி என்ன செய்தாள்? எழுந்தாள்; தன் நேசரைத் தேட விரும்பினாள்; இரட்சிக்கப்படாத மக்கள் வாழ்கின்ற நகரத்தார் மத்தியிலும் உலகத்தோடு ஒத்துவாழும் மக்களின் மத்தியிலும், தான் நேசரைத் தேடினது தவறு என்பதை உணர்ந்தாள். அவர்களால் அவளுக்கு ஒரு தீர்வும் கிட்டாது என்பதையும் அறிந்துகொண்டாள். தான் ஒரு உன்னத அழைப்பைப் பெற்றவள் என்பதையும் புரிந்துகொண்டாள். அது ஆண்டவரும், மணவாளனுமாகிய இயேசு கிறிஸ்துவோடு இணைந்து வாழும் வாழ்க்கை என்பதையும் தெரிந்துகொண்டாள்.

ஆம், இதுவே ஒரு விசுவாசியின் அழைப்பு. கொடியானது திராட்சச் செடியாகிய இயேசுவில் நிலைத்திராவிடின் அது தானாய்க் கனி கொடுக்க மாட்டாது. அதுபோல் மணவாட்டியாகிய விசுவாசிகளும் மணவாளனில் வேர்கொள்ளாவிடின் மற்றவர்கட்குப் பயன்படமாட்டார்கள். அவர்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறார்கள்; உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறார்கள் (மத்.5:13,14). ஆகையால், விசுவாசிகள் உலகிலே வாழும்போது, துர் உபதேசங்களில் சிக்கி விழுந்துவிடாதபடி, நேசராம் இயேசுவின் அன்பினால், எல்லாவற்றையும் மேற்கொள்ள வேண்டும்.

அன்பான விசுவாசிகளே! மணவாட்டி முதற்கண் நேசரைத் தேடியும் ஏன் காணவில்லை? தவறான இடத்திலே சென்று, அதாவது, நகரம், வீதி, தெருக்கள் இவற்றிலே சென்று நேசரைத் தேடினமையால்தான். தேவனுக்கென்று வாழாத புறஜாதியினரிடம் விசுவாசிகள் சென்று துர்உபதேசங்களைக் கேட்டு, தேவனைத் தேடுவதில் குறைவுபடக்கூடாது. உங்களது அழைப்பினை அறிந்து, இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ளும் இடத்திலே சென்று, நேசரைத் தேடுங்கள். அப்போது நேசரைக் கண்டுகொள்ளமுடியும்.

(தொடரும்)

பெண்கள் பகுதி

ஒரு கைதி என்றாலும்
காரி டென் பூம் அம்மையார்
4. சிவனிங்கன் சிறைதனிலே
(தொடர்ச்சி)

கடிதங்கள்

நான் அடைபட்டிருந்த சிறை அறையின் கதவுத்துவாரத்தின் வழியாக, ஒரு கடிதம் உள்ளே திணிக்கப்பட்டது. அக்கடிதத்தைக் கண்டதும், கலங்கி நின்றேன். வீட்டுச்செய்தி எவ்விதமாய் இருக்குமோ என்று அறியவும் மனம் துடித்தது. அண்மையில் சிறையினின்று விடுதலை பெற்ற எனது சகோதரி அக்கடிதத்தை எழுதியிருந்தாள். கை நடுக்கத்தோடு அக்கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

காரி டென் பூம் சகோதரியே, திடன்கொண்டு, கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இரு. சில செய்திகளை உனக்கு எழுதுவதற்குக்கூட என் கை கூசுகிறது. அதை நினைத்தாலே என் கண் கலங்குகிறது. தந்தையார் இறந்துவிட்டார். இயேசுவோடுகூட இருப்பதுதானே அவருக்கு எப்பொழுதும் இன்பம். அவர் விரும்பிய பேரின்பம் அடைவதற்குப் பரலோகம் சென்றுவிட்டார். அவர் கிறிஸ்துவோடு கூட மகிழ்ச்சியாய் இருக்கிறார். அதற்காக நாமும் மகிழ்ச்சி அடையவேண்டுமேயன்றி துக்கம் அடையக்கூடாது.

என்றாலும், முதலாவது இச்செய்தி என்னை ஓர் இடிபோல், கடுமையாகத் தாக்கியது. நான் தந்தையை நினைத்து ஒரு பச்சிளம் குழந்தையைப்போல் விம்மி, விம்மி அழுதேன். வெகுநேரம் வரை அழுதுகொண்டே இருந்தேன். என் அழுகையைக் கிறிஸ்துவே அமர்த்தினார். என் கண்ணீரை இயேசுவே துடைத்தார். அவ்வாறே, உன் கண்ணீரையும் இயேசுதாமே துடைப்பாராக.

இங்ஙனம்,
உனது அன்பு சகோதரி,
இ. டென் பூம்.

இரண்டாம் கடிதம்

அன்புள்ள சகோதரிக்கு,

தந்தையார் இறந்த செய்தி கேட்டு இன்னலுற்றேன்; கண்ணீர் விட்டேன்; அழுதுகொண்டே இருந்தேன்; இப்பொழுது ஒருவாறு தேறியுள்ளேன்

அதிக நேரத்தை ஜெபத்தில் கழிக்கிறேன். கிறிஸ்து என்னைத் தேற்றிவருகிறார். முக்கியமாக, எனது விசாரணை வேளையில் கர்த்தர் என்னோடுகூட இருந்து, என்னை அதிசயமாய் ஆண்டு நடத்தினார். என்னை விசாரித்த அதிகாரிக்கு நான் கிறிஸ்துவைப்பற்றித் தைரியமாகச் சாட்சி கொடுத்தேன். ஒவ்வொரு நாள் விசாரணை முடிவிலும் நான் அந்த அதிகாரியோடுகூட ஜெபித்தேன். வியாழன், வெள்ளி, சனி, திங்கள் ஆகிய நான்கு நாட்களாக விசாரணை நடந்தது.

பேதுருவும் வில்லியமும் எனக்குப் பின்னர் விசாரிக்கப்பட்டு உடனே விடுதலையும் அடைந்தார்கள். நமது விடுதலை என்று வருமோ கர்த்தர் அறிவார். கடவுளுடைய கிருபையால், செஞ்சிலுவைச் சங்கத்தார் எனக்கு மூன்று ஊசிபோட்டு, சிறிது சுகம் கொடுத்துள்ளார்கள். அது கர்த்தரால் ஆயிற்று. செஞ்சிலுவைச் சங்கத்துக்கு நன்றி. எப்பொழுதும்போல எனக்காக ஊக்கமாக ஜெபித்துவரவும். உனது ஜெபம் எனக்கு எவ்வளவு உதவியாக இருக்கிறது தெரியுமா?

இங்ஙனம்,
உனது அன்பு சகோதரி,
பெத்சீ

...தில் கடிதம்

அன்புச் செல்வங்களே,

உங்கள் எல்லாருக்கும் எனது அன்பு. உங்கள் கடிதம் கண்டேன். தந்தையார் இறந்துபோன செய்திகேட்டு புழுவாய்த் துடித்தேன். அதிக நாட்களாக அழுதுகொண்டிருந்தேன். எனினும் நீங்கள் எழுதி இருந்தபடி இயேசு கிறிஸ்து இப்பொழுது என் கண்ணீரைத் துடைத்தருளினார்.

ஆம், தந்தையார் கிறிஸ்துவோடுகூட மகிழ்ச்சியாய் இருப்பதுபற்றி, நாமும் ஆறுதலாக இருக்க வேண்டியதுதான். கிறிஸ்து ஒருவரே எனக்கு இப்பொழுது ஆறுதலாக இருக்கிறார். நான் எப்பொழுதும் அவரையே நினைத்து அவரோடு உறவாடிக்கொண்டு வருகிறேன். நான் எந்த நிலைமையில் இருந்தாலும் கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியாய் இருக்கக் கற்றுக்கொண்டு வருகிறேன். கிறிஸ்து என் மேய்ப்பராய் இருக்கிறார். ஆகையால் நான் தாழ்ச்சியடையேன். அவருடைய கோலும், தடியும் என்னைத் தேற்றும். உங்களுடைய ஜெபங்களும் என்னைத் தாங்கும். ஆகையால் நீங்கள் தவறாது எங்களுக்காக ஜெபித்து வாருங்கள். உங்களுக்கு என் அன்பு.

இங்ஙனம்,
உங்கள் அன்புள்ள,
காரி டென் பூம்
(சிறை அறை 384)

காவல் தலைவி

சிவனிங்கன் சிறையில் மேலும் அதிகக் கட்டுப்பாடு ஏற்படுத்துவதற்கு, ஒரு புதிய பெண் அதிகாரி எங்கள் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டிருந்தாள். அவள் இதற்கு முன்னர் பெர்லின், ஆஸ்லோ சிறைச்சாலைகளில் காவல் தலைவியாக இருந்து, நாசி அதிகாரிகளால் பெரிதும் போற்றப்பட்டவள். சிவனிங்கன் சிறையில் இன்னும் அதிகக் கண்டிப்பும், கட்டுப்பாடும் உண்டாக்கும் நோக்கமாக, அவள் இச்சிறைக்கு அனுப்பப்பட்டிருந்தாள். அவளைப் பார்த்தாலே ஒரு பெரிய பூதம்போல் இருக்கும். அவளுடைய பேய் முகத்தைக் கண்டவுடனே, பெரியவர்கள்கூட எழுந்து நின்று மரியாதை செலுத்தவேண்டும்.

பின்னர் சிறைவாசிகளைக் கேட்பானேன். கைதிகள் படுக்கையில் படுத்திருந்தாலும் சரி, வியாதியால் நடுங்கினாலும் சரி, இப்பூதத்தைக் கண்டவுடனே சட்டென்று ரப்பர் பந்துபோல் படுக்கையினின்று குதித்தெழுந்து, வணக்கத்தோடு நின்றாகவேண்டும். இன்றேல், அக்கைதிக்கு ஐயோ! பேய்போல் நிற்பாள். சிவனிங்கன் சிறையில் உள்ள கைதிகளை எல்லாம் ஆட்டிப் படைத்து வந்தாள்.

கிழவர்கள்கூட இவளுடைய வருகையைக் கண்டு, பளிச்சென்று தங்கள் படுக்கையை விட்டெழுந்து இவளுக்கு நடுங்கி நிற்பார்கள் என்றால், மற்றவர்களைச் சொல்வானேன். அவள் வைத்ததுதான் சட்டம். அவள் விதித்ததுதான் தண்டனை. சிறிய குற்றத்திற்கும், பெருங்கடுங்காவல் விதிக்கப்பட்டுவிடும்.

செஞ்சிலுவை சங்கத்தார் தருமமாகக் கைதிகளுக்கு மனமுவந்தளிக்கும் மருந்துகளையும்கூட, அவர்களுக்குக் கொடுக்காதபடி தடுத்து நிற்பாள். இவளுடைய இம்சைகளை எல்லாம் நாங்கள் ஏற்பதும் ஆண்டவருக்குச் சித்தமாய் இருந்தது போலும். ஆகவே, அவற்றையெல்லாம் புன்முறுவலோடு அனுபவித்தேன். காரணம், அந்த இம்சைகளுக்கு அடியில் காயப்பட்ட கிறிஸ்துவின் கரம் இருந்து எங்களைத் தாங்கி அரவணைத்தது.

(தொடரும்)

வாலிபர் பகுதி

Precious lessons extracted from the miracle of feeding 5000 people

(Mark 6:39-44)

In the miracle performed by Jesus in the desert, the disciples saw a picture of how the Saviour would give Himself to be the bread of life for a starving world. His body would be so broken that others might have eternal life. Four fitting statements recorded in this passage cannot escape our notice. They deserve special mention. They are: He had taken. He blessed. He broke. He gave.

The lessons to be learnt from this passage relating to the miracle of feeding 5000, are as follows:

Lesson I

The disciples of the Lord Jesus should never doubt His power to supply their needs. If Jesus can feed 5000 people with five loaves and two fish, He can meet their exigencies under any circumstances. They can labour without worry about the necessaries of life. If they seek first the kingdom of God and His righteousness, every need will be supplied. Matt.6:25,26 tell us about the cure of anxiety. Jesus says that we should not worry about our food and dress and that we are better than birds whom the Heavenly Father feeds. We should place our trust in our Father's care.

Lesson II

Jesus said, "You give them something to eat." If we give Him what we have, however trivial it may seem, He can multiply it in blessing multitudes. We should be occupied with what God has given us. God has blessed us with some talents and natural abilities. We shall ungrudgingly share them with others. Peter said to the crippled man, *"Silver and gold have I none; but such as I have give I thee. In the name of Jesus Christ of Nazareth rise up and walk"* (Acts 3:6). The crippled man was healed. Luke 6:38 renders thus: *"Give, and it shall be given unto you; good measure, pressed down, and shaken together, and running over, shall men give into your bosom ..."*

Lesson III

The disciples gave Jesus five loaves and two fish. Jesus blessed and broke the loaves and fish. Had Jesus not blessed the loaves and fish, the miracle would not have happened. If Jesus did not break them, they would have been utterly insufficient. Breaking is instantaneous. Giving is continuous. The power of doing miracles in the hands of Jesus was manifested between the breaking and the giving. It is a mystery. It is unbelievable. This is a fact. We can make rapid strides in our spiritual lives, only if our family, work and ministry are acknowledged and accepted by Jesus (Luke 7:14-16). The widow of Nain was blessed because she was broken by the tragedy.

Lesson IV

All the people were satisfied with what the disciples gave. The fragments that were left over (12 baskets full) were more than Jesus started with. God is a bountiful Giver. Ps.68:19 says, *"Blessed be the Lord, who daily loadeth us with benefits, even the God of our salvation."* According to II Cor.9:11 we are enriched in everything to all bountifulness.

A mother took her little son to a shop. After she finished purchasing all the required commodities, the shop-keeper presented the bill to her. Money was paid and the transaction ended. The shop-keeper asked the boy to take some sweets from the bottle. The boy hesitated. Then he said, "Let the shop-keeper give sweets to me. He has a big hand."

May we always remember that our Lord is great and that He deals with us bountifully.

சிறுவர் பகுதி

"அக்கணமே பரமசேனையின் திரள் ...தூதனுடனே தோன்றி:

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், ...மியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் ...ண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித் ...தார்கள்" (லூக்கா 2:13,14).

கிறிஸ்துவுக்குள் அன்பான பிள்ளைகளே! ...யேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவ ...க்கும் தூதன் இதழின் "கிறிஸ்துமஸ் வாழ்த்துக் ...ள்". உலகமே கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் ...ழ்கியிருக்கும் இப்பண்டிகை நாட்களில் இந்தியா ...ன் சில பகுதிகளில் நடக்கும் சண்டைகளும், ...விரவாதச் செயல்களும், மதக்கலவரங்களும் ...ிஸ்தவ மக்களைப் பாதிக்கிறது அல்லவா?

இப்படிப்பட்ட சமாதானமற்ற நிலையில் எப்படிக் ...றிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாட முடி ...ம்? என்ற கேள்வி நமக்குள் எழும்பலாம். இந்தக் ...தையைத் தொடர்ந்து வாசித்து, பதிலைப் பெற்றுக் ...காள்ளுங்கள்.

"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை ..., பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரிய ...ம் உண்டாவதாக" என்றுள்ள சொற்களைப் பிர ...சமான வஸ்திரந்தரித்த தேவதூதர்கள், பயத்தினா ...ம், குளிரினாலும் நடுங்கிக்கொண்டிருந்த மேய்ப் ...களிடம், தங்களது ...த்தக்குரலில் கூறினார்கள். ...த நற்செய்தியை ...வியில் பார்த்துக்கொண்டி ...ந்த நெல்சன், வேக...ாக அதனை நிறுத்திவிட்டு, ...ன படுக்கையில் விழுந்து அழ ஆரம்பித்தான்.

நெல்சன் டி.வி. பார்க்கிறான் என்று எண்ணி ...ங்கு வந்த அவன் அம்மா அவனைக் காணாமல், ...வனைத் தேடி, படுக்கையில் அழுதுகொண் ...ருந்த அவனைக் கண்டு கலக்கமுற்றார்கள்.

"நெல்சன்! ஏனப்பா அழுகிறாய்? தலை வலிக் ...தா? உடம்பு சரியில்லையா? நாளைக்குக் கிறிஸ் ...மஸ் ஆராதனை; இன்று அழுது கொண்டிருக் ...றாயே! என்ன ஆயிற்று உனக்கு?" என்று கரி ...னயோடு கேட்டார்கள்.

"அம்மா! இந்த டி.வி. நிகழ்ச்சியில் 'பூமியிலே ...தானம் உண்டாகும்' என்று தேவதூதர்கள் ...ன்னார்கள். ஆனால், இந்தச் சமாதானம் இப் ...பொழுது இல்லையே; எங்குப் பார்த்தாலும் கலவரம்! நம்முடைய ஜெபவீடும் இடிக்கப்பட்டுவிட்டது. எப்படி கிறிஸ்துமசைக் கொண்டாடுவது?" என்று கோபமாகப் பதிலளித்தான் நெல்சன்.

"நெல்சன்! தயவுசெய்து இப்படியெல்லாம் பேசாதே. இயேசு அப்பா நம்முடைய நன்மைக்காகவே எல்லாவற்றையும் செய்கிறவர்" என்று அமைதியாகக் கூறினார்கள், அவனது தாயார்.

ஆனால் நெல்சனோ, "அம்மா இங்கே பாருங்க! புதுத்துணியும் இல்லை; வீட்டை ஜோடிக்க வில்லை; ஆராதனையே எங்கு நடக்கப்போகிறது என்று தெரியவில்லை. நம்மோடுகூட ஆராதனைக்கு வந்தவர்களில் அநேகர் எங்கு இருக்கிறார்கள் என்றுகூடத் தெரியவில்லை. இப்படிக் கொண்டாடும் கிறிஸ்துமஸ் எனக்கு வேண்டாம்" என்று ஆத்திரமாகக் கூறினான்.

பத்து வயது சிறுவனான நெல்சனின் கோபத்திற்கும் அர்த்தமிருந்தது. பண்டிகை என்றாலே புதுத்துணி, பலகாரங்கள், வண்ணவண்ண விளக்குகள், அலங்காரங்கள் போன்றவை நம் எண்ணத்திற்கு வருமல்லவா? ஆகவே, சிறுவனான நெல்சனும் இப்படிப் பண்டிகையைக் கொண்டாட வேண்டும் என்று எண்ணியதில் தவறேதுமில்லை.

எங்குப் பார்த்தாலும் சண்டைகளும் பிரச்சனைகளும் சூழந்திருந்தது. பூமியிலே சமாதானம் இல்லாதிருந்தும், "சமாதானம், சமாதானம்" என்று சொல்லிக் கொண்டாடும் கிறிஸ்துமஸ் பண்டிகை தேவையில்லை என்று எண்ணி, துக்கத்துடனும், ஆத்திரத்துடனும் காணப்பட்டான் நெல்சன்.

நெல்சனின் தாய், தந்தை இருவரும் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராய் வட இந்தியாவிலுள்ள ஒரு குக்கிராமத்தில் ஊழியம் செய்து வந்தனர். இயேசு கிறிஸ்துவின் கிருபையால் நூற்றுக்கு மேற்பட்ட ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி, அவர்களைச் சபையாகக் கூட்டி, தேவனுடைய ராஜ்யத்துக்கு நேராய் வழிநடத்தி வந்தனர். ஆனால், ஒரு சில சமூக விரோதிகளின் செயல்களாலும் தீவிரவாதிகளாலும் பாதிக்கப்பட்ட அக்கிராமம் சமாதானத்தை இழந்தது. அவர்கள் அரும்பாடுபட்டுக் கட்டியிருந்த ஜெபவீடும் இடிக்கப்பட்டுப் போயிற்று. ஆதி அப்போஸ்தலர் காலத்தில் நடைபெற்றது போலவே விசுவாசிகளெல்லாம் சிதறடிக்கப்பட்டனர்.

ஆராதனை நடத்த இடமில்லாமலும், சிதறுண்டிருந்த விசுவாசிகளைத் தேடி, கூட்டிச் சேர்க்க வேண்டுமே என்ற பாரத்துடன் அலைந்துகொண்

டிருந்த அவன் தந்தையால் நெல்சனின் மன ஏக்கங்களைப் புரிந்துகொள்ள இயலவில்லை.

திடீரென்று ஏற்பட்ட இந்த மாறுதல்களைத் தன் சிறு இருதயத்தில் ஏற்றுக்கொள்ள முடியாமல் தவித்தான் நெல்சன். இந்தப் பண்டிகை நாட்களில் தன் அப்பாவும் அம்மாவும் தன்னிடத்தில் தனிக் கவனம் செலுத்தவில்லையே என்ற ஆதங்கத்தில் அவன் மனம் சோர்வுற்றிருந்தது.

வெளியே சென்றிருந்த அவன் தந்தை சோர்வுற்று வீட்டினுள் வந்தார். “ஆராதனைக்கு இடம் கிடைத்து விட்டதா? விசுவாசிகளைச் சந்தித்தீர்களா?” என்று ஆர்வமாக விசாரித்தார்கள் நெல்சனின் தாயார்.

“ஒருவரிடம் சொல்லியிருக்கிறேன். நம்முடைய சபை விசுவாசிகளில் இருபது பேரைக் கூடச் சந்திக்கமுடியவில்லை. இந்த வருடத்தில் கிறிஸ்துமஸ் ஆராதனை எப்படி நடத்துவது? என்று துக்கமாக இருக்கிறது. ஆயினும், தேவன் பார்த்துக் கொள்வார் என்ற சமாதானம் என் உள்ளத்தை நிரப்பியிருக்கிறது” என்று கூறினார் நெல்சனின் தந்தை.

“நீங்கள் இப்படி எண்ணுகிறீர்கள்; உங்கள் மகனோ, இவ்விதம் எண்ணாமல் கலங்கிக்கொண்டிருக்கிறான்” என்று நெல்சனின் ஆத்திரமிகுந்த சொற்களைக் கணவரிடம் கூறினார்கள் நெல்சனின் தாயார். அப்பொழுது நெல்சனும் அவர்கள் மத்தியில் வந்து அமர்ந்தான். அவன் அப்பா அவனை மெள்ளத் தழுவி அணைத்துக்கொண்டார்.

“மகனே! வெளிப்படையாகப் புதுத்துணி அணிந்து, பலகாரங்களை உண்டு, மற்றவர்களுக்குப் பரிமாற்றம் செய்து, வீட்டை அலங்கரித்துத்தான் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாட வேண்டும் என்பதல்ல. இயேசு கிறிஸ்து தம் பரலோக மேன்மையை வெறுத்து, நமக்காக ஏழ்மையின் கோலம்பூண்டு பூமியில் பிறந்தார். அதனால்தான் இன்றும் அவர் பிறந்த நாளைக் கொண்டாடுகையில், ஏழை மேய்ப்பருக்குச் சொல்லப்பட்ட சமாதானத்தின் நற்செய்தியை நினைவுகூருகிறோம். இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்குத் தம்முடைய சமாதானத்தைத் தந்தது சத்தியமே. சாத்தானோ இப்படிப்பட்டக் கலவரங்களையும் சண்டைகளையும் உண்டுபண்ணி, சத்தியத்தைப் பொய்யாக்க நினைக்கிறான்.

இயேசுவை அறிந்த நீயும் நானும் அதனை ஏற்றுக்கொள்ளமுடியுமா? உலகப் பிரகாரமாக அல்ல, நமது உள்ளான மனதில் இயேசு கிறிஸ்து பிறந்திருக்கிறார். ஆத்துமாவில் உண்டாகும் சந்தோஷத்தோடும் சமாதானத்தோடும் அவர் பிறப்பின் பண்டிகையை ஆசரிப்போம். நிச்சயம் பூமியிலே சமாதானம் உண்டாகும் என்று நான் விசுவாசிக்கிறேன். நீயும் இதனை ஏற்றுக்கொள்வாய் என்று நம்புகிறேன்” என்று அன்போடு கூறினார் அவன் தந்தை.

நெல்சனோடு ஆவியானவர் இடைப்பட்டார். சாத்தானின் வஞ்சகத்தை அவன் தெளிவாகப் புரிந்துகொண்டான். அமைதியாக அவர்களிடம் வந்தான். “சாரி, அப்பா! சாரி, அம்மா! நான் ஏதேதோ பேசி உங்கள் மனதைப் புண்படுத்திவிட்டேன். இயேசு அப்பாவையும் துக்கப்படுத்திவிட்டேன். கிறிஸ்துமஸ் பண்டிகையின் முக்கியத்துவத்தை இப்போது அறிந்துகொண்டேன். இனி, என் சமாதானத்தை யாரும் கெடுக்க முடியாது; எடுத்துக் கொள்ளவும் முடியாது” என்று மகிழ்ச்சியோடு கூறினான்.

அன்பான தம்பி தங்கைகளே! ஒருவேளை இப்பொழுது கலவரங்கள் சற்று அமர்ந்து இருக்கலாம். ஆனால், பொருளாதாரக் குறைவினால் புதுத் துணிகள், அலங்காரப் பொருட்கள், பலகாரங்கள் போன்றவைகள் இல்லாமல் கிறிஸ்துமஸ் கொண்டாடுவது எப்படி? என்று முறுமுறுத்துக்கொண்டிருக்கிறீர்களா?

நெல்சனைப்போல மாறுங்கள். வெளிப்படையான அலங்காரங்களைக் காட்டிலும் கிறிஸ்து நம் உள்ளத்தில் பிறந்திருக்கிறார் என்று எண்ணி, சந்தோஷத்தோடும் சமாதானத்தோடும் இந்தப் பண்டிகையைக்கொண்டாடுங்கள். மாட்டுத்தொழுவத்தில் நமக்காகப் பிறந்த கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

சாட்சிப் பகுதி

என் பெயர் சாம். நான் மாதவரத்தில் வசித்து வருகிறேன். பெங்களூரில் உள்ள ஓர் அலுவலகத்தில் பணி செய்துவருகிறேன். “*நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன்*” (வெளி.3:9) என்ற வசனம் போதகர்மூலம் சபைக்கும், தனிப்பட்ட நபர்களுக்கும் 2008, ஜூலை மாதம் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமாகும். இவ்வாக்குத்தத்தின்படி கர்த்தர் என்மேல் அன்பாயிருக்கிறதை மற்றவர்கள் அறிந்துகொள்ளும்படி, இம்மாதத்தில் எனக்கு அற்புதத்தின்மேல் அற்புதத்தைச் செய்தார்.

ஜூலை மாதம் 15 ஆம் நாள் காலை, நான் பெங்களூரில் உள்ள என் அலுவலகத்தில் பணியில் இருத்தல்வேண்டும் என்ற கட்டளையைப் பெற்றிருந்தேன். அப்படி இருக்கத் தவறினால் என் வேலை பறிபோகும் நிலை காணப்பட்டது. ஜூலை, 14 ஆம் நாள் இரவு, அரசுப் பேருந்து நிலையத்திலிருந்து 11:30 மணிக்கு புறப்படும் ஒரு பேருந்தில் பயணப்படத் தீர்மானித்திருந்தேன். நான் பேருந்து நிலையத்திற்குப் போய்ச் சேரத் தாமதமாகிவிட்டதால், அந்தப் பேருந்தைத் தவறவிட்டேன்.

பெங்களூர் செல்லும் அரசினர் பேருந்து அதன் பின்னர், வேறு எதுவும் இல்லை. மிகவும் குழப்பமடைந்து, பரிதாபமாகவும், இருளிலே கை விடப்பட்டவனாகவும், செய்வதறியாது திகைத்துநின்றேன். அந்நேரத்தில் அம்மாத வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டு, அதிசயங்களைச் செய்கிற இயேசுவை நோக்கி, "எனக்கு ஒரு அற்புதம் செய்து, காலையில் பெங்களூரிலுள்ள அலுவலகம் செல்ல, உதவிசெய்யவேண்டுமென வேண்டுதல் செய்தேன். தனியார் பேருந்து நிலையத்தில் எனக்காகக் கர்த்தர் ஒரு பேருந்தை ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார்.

இரவு 11 மணிக்குச் சென்னைவந்து, புறப்படுச் சென்றிருக்கவேண்டிய அந்தப் பேருந்து, அங்குச் சற்றுத் தாமதமாக வந்ததால் பயணிகள் நிறைந்திருந்தனர். அப்பேருந்தில் ஒரே ஒரு டிக்கெட்டும் இருந்தது. அதற்கும் வழக்கமான கட்டணத்தைவிட மூன்றுமடங்கு அதிகமாகச் செலுத்தவேண்டும் என்று அதன் நடத்துனர் என்னிடம் கூறினார். நான் தயங்கி நின்றபோது, திடீரென ஒரு இந்திய மனிதர் என் தோளைத் தொட்டு, ரிசர்வ் செய்யப்பட்ட டிக்கெட் ஒன்று இருப்பதாகவும், தன்னோடு பிரயாணம்பண்ணவேண்டியவர் அன்று வராததால், அதை வாங்கிக்கொள்ளும்படியும் ஆலோசனை கொடுத்தார்.

நான் மகிழ்ச்சியோடு அப்பேருந்தில் ஏறி, அவருடன் அமர்ந்துகொண்டேன். அந்த நபர் டிக்கெட்டுக்கான கட்டணத்தைக்கூட என்னிடம் வாங்கமறுத்துவிட்டார்.

சாத்தியமற்றச் சூழ்நிலையில் கர்த்தரே அற்புதம் செய்து, இலவசமாகச் சொகுசுப் பேருந்தில் பயணம் செய்யவும், மறுநாள் குறித்த நேரத்தில் பெங்களூர் அலுவலகம் செல்லவும் தயவுபண்ணினார்.

அதுமாத்திரமல்ல, அலுவலகத்தில் காணாமற்போயிருந்த முக்கிய சாவிகள் கிடைக்கப்பெற்றன. எனக்கு அவப்பெயர் உண்டாக்கும்படியாக, ஒருவர் சாட்டிய குற்றங்களைக் கர்த்தர் வாய்க்காமற்போகவும்பண்ணினார். அம்மாதவாக்குப்படி, என் மேல் கர்த்தர் அன்பாயிருக்கிறதை மற்றவர்கள் காணும்படி உதவிசெய்தார். துதி, கனம், மகிமை எல்லாம் கர்த்தருக்கே உரித்தாகட்டும்.

P. சாம்.
மாதவரம்

சபையின் செய்திகள்

1. அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் கிளைச் சபை, தலைமைச் சபை ஊழியர்கள் ஒருங்கிணைந்த கூடுகை

2008, நவம்பர் திங்கள் 3 ஆம் நாள், காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் கிளைச் சபை, தலைமைச் சபை ஊழியர்கள் ஒருங்கிணைந்து கூடினர்.

போதகர் ஆனந்த் அவர்கள், துதி ஆராதனையைப் பொறுப்பேற்று நடத்தினார். பின்னர், போதகர் தாமஸ்ராஜ் அவர்கள், ஏசாயா 66:14 ஐ மையமாகக் கொண்டு, "கர்த்தருடைய கரத்தை ஊழியர் வாயிலாக உலகோர் அறிவர்" என்னும் தலைப்பின்கீழ் நான்கு குறிப்புகளைப் பேசினார்.

தேவன் ஊழியரோடு பேசுவார் (ஏசாயா 8:11); ஊழியரின் தேவைகள் சந்திக்கப்படும் (எஸ்றா 7:6); அநேக ஆத்துமாக்கள் ஊழியரின் வாயிலாக இரட்சிக்கப்படுவர் (அப்.11:21); விசுவாசிகள் போதகரின் கரங்களைப் பெலப்படுத்துவர் (நெகே. 2:18) என்று விளக்கமாகப் போதித்தார்.

கனடாவிலிருந்து வந்திருந்த போதகர் யோஹான் அவர்கள், ஊழியர் இயேசுவுக்கு உண்மையான சீஷர்களாக இருத்தல்வேண்டும் என்றும், பிற மக்களையும் இயேசுவின் சீஷர்களாக மாற்றவேண்டுமென்றும் போதித்தார்.

ஊழியர்கள் தாங்கள் கேட்ட செய்திகளுக்கேற்ப, தங்களை மீண்டும் அர்ப்பணித்து ஜெபித்தனர்.

தலைவரின் ஆசீர்வாத ஜெபத்திற்குப் பின்னர், மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் மிகுந்த ஆசீர்வாதத்துடன் முடிந்தது.

2. அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் தலைமைச் சபை ஊழியர்களின் கூடுகை

2008, நவம்பர் திங்கள் 4 ஆம் நாள், காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ

சபையின் தலைமைச் சபை ஊழியர்களின் கூடுகை கூடிற்று.

துதி ஆராதனையையும், செய்தியையும் தலைமைப்போதகர் எம்.கே.சாம் சுந்தரம் அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார்.

2 தீமோ.4:11 வசனத்தை மையமாகக்கொண்டு, யோவான் மாற்கு தனது ஊழியத்தில் எவ்வெவ் விதங்களில் மற்றவர்களுக்குப் பிரயோஜனமாய் விளங்கினான் என்று விளக்கினார்.

யோவான் மாற்கு பேதுருவால் இரட்சிப்பைப் பெற்றவன். இது மாற்கு சுவிசேஷத்தில் குறிப்பிடப் படவில்லை. யோவான் மாற்கு தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன்; தனது நல்ல தாலந்துகளைப் பயன்படுத்தினவன்; மற்ற ஊழியரோடு கலந்து, அவர்களுக்கு உதவிசெய்தவன்; மிகுந்த தைரியம் கொண்ட ஊழியன்; இரத்த சாட்சியாய் மரித்தவன். இத்தகைய அவனது அருங்குணங்கள் ஊழியருக்குத் தேவை என்பதை தலைமைப் போதகர் விளக்கமாக எடுத்துரைத்தார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்திற்குப் பின்னர், தலைமைப் போதகரின் ஆசீர்வாத ஜெபத்தோடு மதிய உணவும் வழங்கப்பட்டு, கூட்டம் இனிதே முடிந்தது.

News

உடைந்த இதயத்தைத் தூக்கி நிறுத்த சூப்பர் சாரம் கண்டுபிடிப்பு

உடைந்த இதயத்தைத் தூக்கி நிறுத்த முடியுமா? "சாரம்" கட்டினால் தூக்கி நிறுத்திவிட முடியுமே! என்ன வியப்பாக இருக்கிறதா? உண்மை தான், அமெரிக்க நிபுணர்கள் இப்படி ஒரு அதி நவீன, "சாரக்கட்டு" உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ளனர்.

இதயத்துக்கு மட்டுமல்ல, எந்த ஒரு உறுப்புக்கும் திசுக்கள் முக்கியமானது. மெல்லிய இழைகளால் ஆனதுதான் திசுக்கள். புடவை இழைபோல எந்த உறுப்பையும் பின்னிப்பிணைந்திருக்கும். இது பலவீனம் அடைந்தால், உறுப்பு பலவீனம் அடையும்.

இப்படித்தான் இதயத் திசுக்கள் பலவீனம் அடைந்தாலோ, குறைபாடுகளுடன் இருந்தாலோ, அதை மாற்றியமைக்கத்தான் இந்த, "சாரம்" கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாரத்தைப் பொருத்திவிட்டால் போதும், நாளடைவில், திசுக்கள் மீண்டும் உயிர்ப்பெற்று, பழைய வலுவான நிலைக்கு வந்துவிடும். எளிதில் மக்கி அழியக்கூடியது மட்டுமல்ல, புதிய திசுக்களுடன் சேர்ந்துவிடும் தன்மையும் கொண்டது. சிலந்தி வலை போன்று இச்சாரம் காணப்படுவது, இதன் சிறப்பு அம்சமாகும்.

இதற்கு முன்பும், இதுபோன்ற சாதனத்தை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். ஆனால், இப்போது மசாசூட்ஸ் தொழில்நுட்ப பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பாபின் ஜார்ஜ், லிசா ப்ரீடு ஆகியோர் இணைந்து உருவாக்கியுள்ள இந்தச் சாரம் அதி நவீனமயமானது மட்டுமன்றி, எளிதில் பொருத்தக்கூடியதும், திசுக்கள் வளர்வதற்கு உதவுகின்றதுமாகும்.

ஏற்கனவே, கண் அறுவை சிகிச்சையின்போது பயன்படுத்தக்கூடிய வகையில் நவீன சாரத்தை இவர்கள் கண்டுபிடித்து வெற்றி கண்டனர். அதைச் சற்று மாற்றியமைத்து, இதயத்துக்குப் பொருந்தும்படி வடிவமைத்துள்ளனர்.

விஞ்ஞானிகள் இது குறித்துக் கூறுகையில், "எலியின் இதய செல்களிலிருந்து திசுக்கள் உருவாக்கப்பட்டு, அதன் மூலம் உயிர்த்தன்மையுள்ள சாரக் கட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதனால், மனிதர்களுக்கு எளிதில் இது பொருந்தும். புதிய திசுக்கள் வளர்ந்ததும், அவற்றுடன் சேர்ந்துவிடும் தன்மையும் இதில் உள்ளது. அதனால், யாருக்கும் இது எளிதில் பொருந்தும்; முழுப் பலன்களையும் தரும்" என்று தெரிவித்தனர்.

தினமலர் 16.11.2008

2009 ஆம் ஆண்டு காலண்டர்

அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் 2009ஆம் ஆண்டுக்கான வாக்குத்தத்த வசன காலண்டர்கள் புத்தகசாலையில் விற்பனைக்கு உள்ளன.

விடுதலைத்தூதன் வாசகர்கள் அனைவருக்கும் எங்களது இதயங்கனிந்த கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்

We wish you a very Happy Christmas

தேவன் அனுமதித்தார்

பிறரால் மனநிலையில் நீ காயப்படுவதை
தேவன் அனுமதித்தார்.
ஏனென்றால், பலருடைய மனக்காயங்களை நீ
கட்டுகின்ற மனிதனாக மாறவேண்டும்.

சில காலம் நீ தனிமையில் நிற்பதை
தேவன் அனுமதித்தார்.
ஏனென்றால், தனிமையில் நிற்பதாக உணரும் சிலருக்கு
நல்ல ஐக்கியம் நீ தரவேண்டும்.

பிறரால் நீ கைவிடப்பட்டு நிற்பதை
தேவன் அனுமதித்தார்.
ஏனென்றால், கைவிடப்பட்ட சிலரை நீ தூக்கிடும்
மனிதனாக மாறவேண்டும்.

காரணமின்றி நீ குற்றஞ்சாட்டப்பட்டதை
தேவன் அனுமதித்தார்.
ஏனென்றால், பிறரைக்குறித்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம்
கண்ணை மூடிக்கொண்டு நீ நம்பிவிடக்கூடாது.

சில நேரங்களில் நீ பலவீனமாக இருப்பதை
தேவன் அனுமதித்தார்.
ஏனென்றால், பிறருடைய பலவீனங்களை நீ புரிந்துகொள்ளும்
மனநிலையில் பக்குவம் பெறவேண்டும்.

ஒருவர்கூட உனக்கு உதவி செய்யாத நிர்ப்பந்த நிலையை
தேவன் அனுமதித்தார்.
ஏனென்றால், ஒரு சிலருக்காவது உண்மையாக நீ
உதவிசெய்யவேண்டிய அவசியத்தைப் புரிந்துகொள்ளவேண்டும்.

Reg. Number TN/CCN/203/06-08. Licence to the post under WPP No.TN/CCN/85/06-08
Regd. Under Regis. of News paper for India No.(1)1295/57, Posting date 29th & 30th of every month.
Date of Publication : monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrica Channel, Egmore, Chennai-600 008.

ஏ.சி.ஏ. இலக்கிய ஊழியத்தின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள நூல்களின் பட்டியல்

Book - Rs.5

1. உங்கள்மீதுள்ள அபிஷேகம்
2. விசுவாசிகளின் சாட்சிகள்
3. சாட்சிகள் 60
4. உத்தம சாட்சிகள்
5. இயேசுவின் அன்பு (சாட்சிகள்)
6. எஸ்தர்
7. இயேசு கிறிஸ்து மாறாதவர்
8. ஒளி வீசும் சாட்சிகள்
9. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
10. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
11. ஆவிக்குரிய வேதசத்தியங்கள்
12. தசமபாகம் கர்த்தருக்குரியது
13. Jesus Met Me in Jail
14. Spiritual Truths from the Bible
15. Tithe Belongs to God
16. My Experiences
17. எனது அநுபவங்கள்

Book-Rs.10/-

18. அநாதி கிருபை
19. கர்வாலி மரம்
20. பக்திவிருத்தி உண்டாக்கும் சாட்சிகள்
21. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
22. நீதிமான்கள்
23. கிறிஸ்துமஸ் செய்திகள்
24. இயேசு உயிர்த்தெழுந்தார்
25. நீதியின் சூரியன்
26. பரதேசிகளாகிய நாம்
27. கிறிஸ்துவ குடும்பம்
28. நித்திய பிரதான ஆசாரியர்
29. சபை சபைதானா?
30. யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்
31. புத்தாண்டு தேவசெய்திகள்
32. விழித்திரு
33. சிலுவைக்கு அப்பால்
34. வணக்கம்
35. இரட்சிப்பின் சாட்சிகள்
36. ஜீவனுள்ள சாட்சிகள்
37. அற்புத சாட்சிகள்
38. சாட்சிகள்
39. எரி நரகத்திற்குத் தப்பினேன்
40. மாபெரும் மாற்றம்
41. நன்றியுள்ள சாட்சிகள்
42. கல்லூரியில் அற்புதங்கள்
43. நற்செய்தி கதைகள்
44. தீப ஒளி
45. வழிகாட்டும் கதைகள்
46. அந்தக் கடிதங்கள்
47. அந்த மயில்கள்
48. கனமான ஊழியம்
49. வெளிச்சம்
50. ஆத்தும நேசர்
51. ஐக்கியம்
52. கொடி
53. இன்னும் சந்தேகமா?
54. அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
55. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
56. மேய்ப்பரின் அறிவுரைகள்
57. முதலாம் ஆதாம்
58. ஆசீர்வாதங்களின் திறவுகோல்
59. நீரே என் மேய்ப்பர்
60. தேவ ஊழியம்
61. உத்தம ஊழியன்
62. Eternal Grace
63. The Star
64. The New Year
65. Spiritual Questions
66. The Timely Warning
67. The Blessing
68. Your Response to the Cross
69. The Power of Prayer
70. Springs in the Valley
71. A Narrow Escape from Hell

Book-Rs.15/-

72. ஏழு வார்த்தைகள்
73. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
74. இயேசு கூறின உவமைகள்
75. அதிசயமான தேவகிருபை
76. Amazing Grace of God
77. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 4

Book - Rs.20/-

78. என் நேசரின் சத்தம்
79. தேவனுடைய வாக்குத்தத்தச் செய்திகள்
80. வாக்குத்தத்த செய்திகள் 2004
81. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 1
82. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 2
83. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
84. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
85. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 1
86. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 2
87. ஒருவருக்கொருவர்
88. Successful Ministers of the Lord
89. Messages of God's Blessings 1
90. Messages of God's Blessings 2

Book - Rs.25/-

91. A Good Soldier of Jesus Christ
92. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 3
93. வாக்குத்தத்தச் செய்திகள் 2005
94. வாக்குத்தத்தச் செய்திகள் 2006
95. தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்
96. வாக்குத்தத்தச் செய்திகள் 2007
97. ஜெபத்தின் வல்லமை

Book - Rs.30/-

98. நல்ல போர்ச்சேவகன்
99. ஆவிக்குரிய தேவசெய்திகள்

வேண்டுவோர் விரும்பும் நூல்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி

24hrs Prayer line: 26625815

Herald of Deliverance

Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622388/26622775 website:www.acaprayerhouse.org

Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007.
Phone: 26622021 e-mail: acalm@acaprayerhouse.org

Printed by :Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street, Vadapalani, Chennai -600 026. Phone: 24728885/Cell:9841429079